12 பக்கங்கள் விலை 40 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 26—3—1978 | இதழ் 28

"எல்லாமே நீதான்!" என்றிருக்கிறேன்

உடன்பிறப்பே,

இந்த வாரம் உனக்கு எழுதும் இந்தக் கடிதம் மிக மிக முக்கியமானதாகும். 'நம்நாடு' இதழின்வாழ்வும் தாழ்வும் உன்னுடைய கையிலேதான் இருக்கிறதென்பதால் இம்மடல் எழுத நேரிடுகிறது.

அமைப்பு ரீதியாகக் கட்சி ஏடுகளை நடத்துவதென்பதில் எவ்வளவோ தொல்லைகள் இருக்கின்றன, அந்தத் தொல்லைகள் தொடரும் என்று எதிர்பார்த்தே தான் 'நம்நாடு' இதழை மீண்டும்தொடங்கினேம். மற்ற வார இதழ்களைப் போலஅல்லாது ஒருகுறிப்பிட்ட கொள்கை விளக்க ஏடாக வெளிவரும்போது வியாபார ரீதியில் நம் நாட்டை நடத்துவதுஎன்பது இயலாத காரியமாகும். எனினும் எண்ணியதைவிட நம்நாடு இதழ் விற்பனையின் எண்ணிக்கை மனமகிழ்ச்சிதருவதாகவே அமைந்துள்ளது. வாரந்தோறும் வாசகர்கள் பெருகுகின்றனர். சந்தாதாரர்கள் அதிகரித்து வருகிறார்கள். பிரதிகளின் எண்ணிக்கை அதிகமாவது மன நிறைவையூட்டுகிறது என்றாலும்கூட அதிகமாகும் எண்ணிக்கைக்கேற்ப இழப்பும் ஒவ்வொரு வாரமும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. காரணம் என்ன? அச்சிடும் தாளின் விலை அந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

இதே நிலை நீடிக்குமானல் வாரந்தோறும் சிறிய அளவில் ஏற்படுகிற இழப்பு மாதக் கணக்கில் சிறுதுளி பெருவெள்ளமாகி, இதழை நிறுத்திட வேண்டிய கட்டாயத்திற்கு நம்மை ஆளாக்கிவிடக் கூடும்.

'நம் நாடு' இதழின் தேவையை நீ உணருகிறாய்! கழகத்தின் கேடயமாக அது விளங்குகிறது என்பதையும் மறுக்கமாட்டாய்! நமது கழக முன்னணியினர் பலரும் அக்கறையுடன் முன்வந்து அரிய கொள்கை விளக்கக் கட்டுரைகளைத் தீட்டி இந்தக் கழக ஏட்டினைக் காத்திட ஆற்றிடும் பணியை நீ கிழமை தோறும் காண்கிறாய்.

இதழ் தொடங்கிய ஒரு திங்களுக்கெல்லாம், நான் எழுதும் தொடர்கதை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கிடையே கறுப்புக் கொடி அறப்போர், சிறைவாசம் போன்ற பல நிகழ்ச்சிகள் குறுக்கிட்டு விட்டன. அப்போது வராத கதை, வராமல் போகாது! தொடர்கதை வரும்; அதுவும் தொய்வின்றித் தொடர்ந்து வரும். ஏப்ரல் திங்கள் இரண்டாம் வாரம் அல்லது மூன்றாவது வாரம் முதல் "போர்வாளும் பூவிதழும்" என்று அறிவிக்கப்பட்டதொடர்கதை துவங்கிடும்.

காலமாறுதலுக்கேற்பக் கருத்துக்களுக்கு வண்ண மூட்டித் தரும் முறையும் மாறிட வேண்டும். அது முழுமையாக 'நம்நாடு' இதழில் கடைப்பிடிக்கப் படவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

என்ன செய்வது; நானே அனைத்தையும் கவனிப்பது என்பது முடிகிற காரியமா?

முரசொலியில் ஒரு நாள் கடிதம் எழுதாவிட்டால், அதனை முகஞ்சுளித்துக் கொண்டுதான் வாங்குகிறாய்!

குங்குமத்தில் குறளோவியத்திற்கு ஒரு வாரம் ஓய்வு என்றால் கோபித்துக் கொள்கிறாய்!

குக்கிராமங்களிலிருந்து வருகிற உன்னை வரவேற்று, வந்த விபரம் கேட்டு, கழகப்பணி குறித்து விசாரித்து அனுப்பி வைத்தால்தான் உனக்கும் மன நிறைவு! எனக்கும் மன நிறைவு!

இதற்கிடையே காலை எட்டரை மணிக்கெல்லாம் புறப்பட்டால்தான் சட்டப்பேரவையில் கேள்விநேரத்தில் கலந்து கொள்ளமுடியும். அமைச்சர்கள் வராமல் இருக்கலாம். எதிர்க்கட்சித் தலைவனாயிற்றே நான்; போகாமல் இருக்க முடியுமா? ''சட்டசபை செத்துவிட்டது'' என்று சொல்லி, வேறு வேலை பார்க்க முடியுமா என்ன?

''கலைத்துறை மூலம் கருத்துக்களைச்சொல்'' என்றும் நீ தான் கட்டளையிடுகிறாய். அந்தப் பணியையும் தோள்மீது போட்டுக் கொண்டிருக்கிறேன்.

அத்துடன் விடுகிறாயா? கூட்டத் தேதி — மண விழாத் தேதி — இப்படி தேதி கேட்டுச் சூழ்ந்து கொள்கிறாய்; ஒப்புக் கொண்டு வந்தாலோ, கசக்கிப் பிழிந்த பிறகே திரும்பச் சென்னைக்கு அனுப்புகிறாய்.

கலைஞர் கடிதம்

இத்துடன் முடிகிறதா? வழக்குகள், விசாரணைகள், வழக்கறிஞர்களுடன் விவாதங்கள் —

உடன்பிறப்பே! நீ என்மீது கொண்டுள்ள பாசமும், நம்பிக்கையும்தான் இத்தனை வேலைகளையும் செய்கிற உள்ள உறுதியையும், உடல் வலிமையையும் எனக்கு வழங்கியிருக்கிறது என்று சொன்னல் அதுதான் மறுக்க முடியாத உண்மை!

பணிகளின் குவியல்களினூடே 'நம் நாடு' வளர்க்கப்பட வேண்டும் என்று நான் கொண்டுள்ள தீராத ஆசைக்கு நீதான் துணையிருக்க வேண்டும்.

இழப்பினைக் கணக்கிட்டுப் பார்த்து, ஏப்ரல் முதல் வாரத்து இதழிலிருந்து விலையை ஐம்பது காசாக்குகிறோம். பத்துக் காசுதான் அதிகம்' நீ, கழகத்தின்மீது கொண்டுள்ள பற்றுக்காக அந்தப் பத்துக் காசைப் பெரிதாக எண்ணிடமாட்டாய்! எண்ணிடக்கூடாது!

★ அத்துடன் நில்லாது சந்தாதாரர்களின் எண்ணிக்கையை நீ முயற்சித்து அதிகப்படுத்து!

★ முடிந்த வரையில் விளம்பரங்களை வாங்கி அனுப்பு!

★ 'நம் நாடு' இதழ் வாங்கப்படாத கிளைக் கழகம் - குறையுடைய கழகமே என்ற நினைப்பு உனக்கு இருந்திட வேண்டும்.

★ விற்பனையாளர்களும், தங்கள் கடமையைப் பொறுப்புணர்வோடு செய்திட நீ தூண்டுகோலாக இருக்க வேண்டும்.

எல்லாமே நீதான் என்று நம்பி இருக்கிறேன். அந்த நம்பிக்கை 'நம் நாடு' வளர்ச்சியில் குன்றிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது; உடன்பிறப்பே! உன் தலையாய பொறுப்புக்களில் ஒன்று.

அன்புள்ள,

மு. க.

★ என் நம்பிக்கையைத் தகர்த்திடாதே! ★



சுமந்தவள்

கருணாநிதி

"என்னைச் சுமந்தவள்; நான் பிறந்ததும் தான்பட்ட வேதனையை மறந்து தாமரை முகம் காட்டியவள்; நான் சிரித்தால் சிரித்து, அழுதால் அழுது எனக்கு அமுதூட்டிய பெருமாட்டி என் தாய்— என் தெய்வம் — என்றைக்காவது ஒருநாள் என்னை விட்டுப் பிரிந்துவிட்டால்...

அம்மவோ! அதை நினைக்கவே என் நெஞ்சுக்குத் தென்பில்லை. இந்தத் தள்ளாத வயதிலும் எவ்வளவு சுறுசுறுப்பு! எத்துணை குடும்பக் கவலை! ஒரு கணம் அந்த எலும்புக்கால்களுக்குத்தான் ஓய்வுஇருக்காதா? கொல்லைப்புறம்— கூடம்— அடுக்களை தெருவாயில்— மாடிப்படி— இப்படி எங்காவது ஓர் இடத்தில் கீழே கிடக்கும் துரும்பையாவது எடுத்து வெளியே போட்டுத் தூய்மைப் படுத்தும்பணியில் துருதுருவென்று இருக்க எப்படித்தான் முடிகிறதோ?

உழைத்து உழைத்து ஓடாகத் தேய்ந்துவிட்ட அந்தத் திருவுருவம் ஒருநாள் நீங்காத் துயில் கொள்ள நேரிடுமே— அந்த வேதனையை எவ்வாறு தாங்கிக் கொள்ளப் போகிறேனோ; தெரியவில்லையே? எலும்பும் தோலுமாக ஒரு கிழம் கிடப்பது வீடு முழுதும் விளக்கேற்றிவைத்ததுபோல ஒளிமயமாய்த்திகழும்; குஞ்சு குழுவான்கள் நிறைந்த குடும்பத்தையே தாங்கிக் கொண்டிருக்கும் தூண் அந்தப் படுகிழம்தான். அந்தப் பழுப்பு இலையின் நிழலிலே நாங்கள் காணும் குளிர்ச்சியைஇழந்துவிடுவதற்கு எப்படித்தான் மனம் வரும்!"

இத்தகைய நினைவுகளோடு தாழ்வாரத்தில் உலவிக் கொண்டிருந்தேன். தாயின் அன்புக் கரத்தின் தழுவல் இல்லாதபாலைவனம்போன்ற ஒரு வறண்ட எதிர்காலத்தைக் கற்பனை செய்து களைத்துப்போய் மெலிந்த பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தது என் நெஞ்சம். தாயில்லாத வீடு! தாய் அளிக்காத உணவு. தாயின் அன்புமொழி கேட்டு இன்பம்பெற முடியாத செவிகள். தாயின் அருள் முகம் காண இயலாத விழிகள். தாயில்லாத நான்! இவைகள் எல்லாம் எனக்கு வருங்காலத்தில் புயல்—பூகம்பம்— சூறுவளி எனத்தக்க பெரும் சுழற்சிக் கொந்தளிப்புகள் அல்லவா?

தாயின் மீதுள்ள பாசம் மட்டும் மனிதனை ஏன் இவ்விதம் ஆட்டிப் படைக்கிறது? வாட்டி வதைக்கிறது? தாய் என்ற சொல்லுக்கு இவ்வளவு மகிமை ஏன்? மதிப்பு ஏன்? உண்மையிலேயே தாய் என்றால் யார்? தாய்க்குரிய இலட்சணங்கள் தான் என்ன? பெற்று விட்டால் அவள் தாயாகிவிடுவாளா? பிள்ளை பெற்றவர்கள் எல்லாம் தாய்கள்தானா?

இந்தக் கேள்விகளுக்கு விடை காண வேண்டுமென்ற அவா உள்ளத்தில் கொடி கட்டிப் பறந்தது.

அப்போது என் தாயார்மெல்ல மெல்லஎன்பக்கம்வந்துநின்று என் முகத்தை அன்பு கசிய உற்றுப்பார்த்து "ஏனப்பா ஒரு மாதிரியிருக்கிறாய்?" என்று ஆவலைக் கொட்டினார்கள்.

"ஒன்றுமில்லையம்மா. உட்காருங்கள்!" என்றேன். என்னை உட்கார வைத்தவாறு அவர்களும் உட்கார்ந்தார்கள்.

"அம்மா! ஒரு சந்தேகம் — நீங்கள் விளக்க வேண்டும்!" என்றேன்.

"என்னடா கண்ணு? ஓயாமல் படிக்கிறாய் — ஊருக்கெல்லாம் பேசுகிறாய்—என்னிடத்தில் வந்து சந்தேகம் கேட்கிறாய்?" என்று அம்மா கொஞ்சினார்கள்.

"ஓயாமல் படிக்கிறவன்— ஒப்பற்ற மேதை— உலகு புகழ் நிபுணன்— என்றெல்லாம் உயரத்தில் நிற்கிறவனுக்குக் கூட சில சமயங்களில்தாயின் அருமை தெரியவில்லையே; அந்த அடிப்படையில் எழுந்ததுதான் இந்தச் சந்தேகம்"

"ம்! மேலே சொல்லு'; என்றார்கள் தாயார்.

"தாய்மை என்றால் என்ன? தாய் என்றால் யார்? பெற்றவள் தாயா? பேணி வளர்த்தவள் தாயா? இதற்குஎனக்கு விளக்கம் வேண்டும்'"

தாயின் கண்களில் புது ஒளி தோன்றியது. அமைதியாகப் பதில் சொன்னார்கள்.

"நடந்த கதையொன்றைச் சொல்லுகிறேன் கேள்! கதையைக் கேட்டால் உன் சந்தேகம் நீங்கும். விளக்கம் கிடைக்கும்!" என்றவாறு கதை சொல்லத் தொடங்கினார்கள். தாயார் கூறிய கதை இதுதான்;

"அண்ணா! எனக்குஇப்போது திருமணமே வேண்டாம் தயவுசெய்து என்னைத்தொந்தரவு செய்யாதீர்கள்; விட்டுவிடுங்கள்.'

"தம்பி! திருமணம் என்ன தீக்குண்டமா? ஏன் இப்படி நடுங்குகிறாய்? இதோ நானும் உன் அண்ணியும் மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்தவில்லையா?"

"திருமணமே கூடாது என்று கூறவில்லை, அண்ணா! இப்போது தேவையில்லை என்கிறேன். என்னதான் வசதிகள் இருந்தாலும் மாதம் நூறு ரூபாய் சமபாதிக்கிறேன் என்ற கௌரவம் இல்லாவிட்டால் எனக்கு யார்

(6-ம் பக்கம் பார்க்க)

உள்ளத்தைப் புண்படுத்தும் எந்தக் கட்சியானாலும்......!

அரசியலில் நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்லுவேன், சர்வாதிகாரத்தை வீழ்த்தி ஜனநாயகத்தைக் காப்பாற்ற முயற்சி எடுத்துக்கொள்ளும் ஜனதா கட்சியை — அவர்களுக்கும் எங்களுக்கும் எவ்வளவுதான் காழ்ப்புணர்ச்சி வந்தாலும், மனமாச்சர்யங்கள் ஏற்பட்டாலும் நான் அந்த மரியாதையை என்றைக்கும் மறந்துவிடமாட்டேன். அந்த மதிப்பை அவர்களுக்கு அளிக்கத் தவறமாட்டேன்.

சர்வாதிகாரத்தை வீழ்த்தி ஜனநாயகத்தை மலரச் செய்த பெருமைக்கு ஜனதா கட்சிக்கு உரிமை உண்டு என்பதை நான் சாகிறவரையில் சொல்லிக்கொண்டே இருப்பேன். ஆனால், அதே நேரத்தில் எப்படி இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றோம் என்று கூறிக்கொண்டு காங்கிரஸ்காரர்கள் செய்த தவறுகளை திராவிட முன்னேற்றக் கழகம் கண்டித்ததோ அதைப்போலவே 'நாங்கள் இந்தியாவிற்கு சர்வாதிகாரத்தை வீழ்த்தி ஜனநாயகத்தைக் கொண்டு வந்தோம்' என்கின்ற ஒரே ஒரு பெருமையோடு அவர்கள் தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளத்தைப் புண்படுத்த ஜனதா கட்சியல்ல, வேறு எந்தக் கட்சி விரும்பினாலும் அதைத் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுத்துக்கொள்ளாது என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

—கலைஞர்.

அன்னை தரும் படிப்பினை

குு. மா. பாலசுப்பிரமணியம் எம். எல். சி.

உலகில் பிறந்த அனைவர்க்குமே உணவை மட்டுமல்ல; உணர்வையும் ஊட்டுகிறவள் அன்னைதான்; நம் உடலை மட்டுமல்ல; உள்ளத்தையும்வளர்க்கிறவள் அவளே தான்

- எதைத் தின்ன வேண்டும்; எதைத் தீண்டக்கூடாது...

- எப்படி நடக்க வேண்டும்; எவ்வாறு திரியக்கூடாது...

- எவரோடு பழக வேண்டும்; யாரோடு சேரக்கூடாது...

இவற்றையெல்லாம் கற்பித்து, வாழ் வாங்கு வாழ வழி காட்டுகிறவள் அன்னை தான்! ஆனால் மற்ற அன்னையரெல்லாம் உயிருடன் இருக்கும் வரையில்தான் படிப்பினை தருவார்கள். அன்னை மணியம்மையாரோ, இறந்த பிறகும் நமக்குப் படிப்பினை வழங்குவதே மிகப் பெரிய விந்தையாகும்! அவர் நாவசையாமலே நடத்திக் காட்டும் போதனை இதோ!

ஒரு சில மாதங்களுக்கு முன்னால் அன்னையார் கறுப்புக்கொடியேந்திச்சென்ற போது, வழிமறித்து வாய்கூசாமல் வசை கூறிய அதிகாரிகளே, அவருடைய இறுதி ஊர்வலத்துக்கு வழி விலக்கித் தருவதற்காக ஓடோடி வந்தார்கள்.

அன்றைக்கு அன்னையாரையே சிறையிலடைப்பதற்கும் ஆணையிட்ட அமைச்சர்களே. அவருடைய பொன்னுடலைப் புதைகுழியில் இறக்குவதற்குத் தோள் கொடுத்தார்கள்

பத்து நாட்களுக்குமுன் அரசு ஊழியர்களை ஆதரித்து அன்னையார் எழுதிய அறிக்கையை அலட்சியபபடுத்திய ஆணவக்காரர்களே. அந்த - மணிக்கரங்கள் அசைவற்றுப் போனதுகண்டு கண்ணீர் சிந்தினார்கள்!

இவையெல்லாம், உண்மையான உறுதிக்கு முன்னால் தன்னலத்தின் தலைக்கனம் மண்டியிட்டே தீரும் என்று நமது அன்னை தரும் படிப்பினைகளாகும்!

இந்த நேரத்திலே, அன்னையின் அருமை தெரிந்தவர்கள் ஆட்சியிலிருந்தால், அண்ணவுக்குச் செய்தது போலவே அன்னைக்காகவும் அமெரிக்க டாக்டர்களை அழைத்திருக்க முடியும். ஒருக்கால் அன்னையின் உயிரைக் காப்பாற்றியிருக்கவும் கூடும். பெருவாரியான அறியாத மக்கள் செய்த பிழை. நம் எல்லோரையுமே 'தாயில்லாப் பிள்ளை'களாக்கி விட்டது! இதையே இன்னொரு விதமாகவும் சிந்தித்துப் பார்க்கிறேன்.

வாழ்வாரையே வாழ்த்துவதன் மூலம் வசதி தேடுகின்ற வாழ்க்கையைச் சில புத்திசாலிப் பெரிய மனிதர்கள்' கடைப்பிடிக்கிறார்களே - அதே 'வித்தை'யை நமது அன்னையாரும் செய்திருந்தால்; -

கை உயர்ந்த பக்கத்தில் கட்சி தாவி 'நாவலலவராக' நடிக்க அவரும் முயற்சி செய்திருந்தால், -

"இனப் பற்றுல் என்ன இலாபம்? பணப் பற்றே பாதுகாப்பு" என்று நினைத்திருந்தால், -

அதிகாரம் பெற்றவர்களுக்கே ஆசி கூறுவதாக அவர் கையைச் சிறிது அசைத்திருந்தால், -

"சர்வாதிகார வெறிக்குத் தூபம் போட்டதும் துணை போனதும். தமிழகக் காளையரைச் சுட்டுச் சாய்த்ததும் சரிதான்". என்று அவர் ஒரு சொல் உதிர்த்திருந்தால்

"ஆகா! தமிழ் இனத்தின் தாய்க்குலமே எங்கள் பக்கந்தான்!' என்று அடையாளம், காட்டுவதற்காவது அன்னையாரைக் கோபுரத்திலல்லவா ஏற்றி வைத்திருப்பார்கள் உச்சாணிப் பதவியிலல்லவா உயர்த்தியிருப்பார்கள்!

அத்தகைய 'அவமானச் சிறப்பு களை அன்னையார் விரும்பாதது ஏன்? 'உடல்நலக் கேடு; உயிருக்கே ஆபத்து' என்ற நிலையிலுங்கூட அவர் கலங்காத உறுதியுடன் கறுப்புக் கொடியேந்திக் களம் புகுந்தது ஏன்?

"தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டூகங்களை'ப் போன்றவரல்ல நம் அன்னையார்! தந்தை பெரியாருடனிருந்து, தன்மான உணர்வையே பெண்மான உணர்வாகவும் போற்றிப் பழகி விட்டவர் அன்னையார். ஈரோட்டுப் பாசறையில் அவர் இனஉரிமைக்காக இன்னுயிரைப் பலியிடத்தான் கற்றிருந்தாரேயன்றி எட்டப்பன் துரோகத்தைக் கற்றிருக்கவில்லை!

அதனால்தான் அன்னையார். நாடாளும் கோட்டையிலே பதவி தேட விரும்பாமல் நாலரைக் கோடி தமிழ்மக்களின் நல்விதயக் கோட்டையிலே பதவி தேடிக்கொண்டார்!

மிக அண்மைக் காலத்திலே, சிந்தனைச் சிற்பி சிற்றரசு, அண்ணாவின் அன்புத் தோழர் சி. வி; இராசகோபால் ஆகியோர் மறைந்தனர். அவர்களாவது அறுபதாண்டுகளைக் கடந்த பின் மறைந்தார்கள். நமது அன்னையாரோ ஐம்பத்தேழாண்டிலேயே மறைந்து விட்டார். அடுத்தடுத்து மறைந்த இம்மூவரின் வரலாறுகளும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்குரியன. யார், எத்தனை வயதில் மாண்டார் என்பது முக்கியமல்ல; உயிருள்ள வரையிலும் - உயர்ந்தாலும் - தாழ்ந்தாலும் - உறுதியான கொள்கையுடன் இருந்தவர்கள் யார்என்பதைத்தான் வருங்காலம் பாராட்டும்.

பிறந்தவர்கள் எல்லோருமே என்றாவது ஒருநாள் இறக்கத்தான் செய்கின்றனர். இதில் ஒரு சிலர் அறுபதாண்டில்! வேறு சிலர் ஐம்பதாண்டில்! மற்றும் சிலரோ முப்பதிலும் இருபதிலுங்கூட முடிந்து விடுகின்றனர். இவற்றையெல்லாம் கண்ணெதிரில் பார்த்துக் கொண்டே, 'மிகப் படித்த மேதை' சிலர் மட்டும், எழுபதுக்கு மேலும் "ஏதோ ஒன்றை எதிர்பார்த்து" ஏங்குகிறார்களே; இத்தனை காலம் சேகரித்த பெருமைகளையெல்லாம், இறுதி நாளின் வசதிக்காக அடகு வைக்கிறார்களே! "அங்கே அது கிடைக்கவில்லையென்றால், இங்கே இதாவது கிடைக்காதா?" என்று இடம் தேடி அலைகிறார்களே!

உலகமுள்ள வரையிலும் உயிர் வாழப் போவதாக எண்ணமா? நம் அன்னை தரும் படிப்பினையாவது அவர்கள் கண்ணைத் திறக்குமா?

வாழ்வு சிறிது; வரலாறு பெரிதாயிற்றே!

குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்களா

ஜெயில் ஐ. ஜி,யாக இருந்தாரே பரமகுரு அவர்கள், அடித்த அந்த வித்தியாசாகரைவிட, அடித்த அந்த கையூமைவிட மோசமாக ஒருவர் இருக்கிறார் என்று சொன்னால் அவர் பரமகுரு தான்!

நான் வித்தியாசாகரைக்கூட மன்னிப்பேன்! அந்தக் கையூமைக்கூட மன்னிப்பேன். ஆனால், பரமகுருவை மன்னிக்கவே கூடாது!

...பரமகுரு மாத்திரம் ஒழுங்கான முறையில் ஜெயிலுக்குப் போயிருந்தால், அவர் (பரமகுரு) இதை (அடிப்பதை) ஆதரிக்கமாட்டார் என்று தெரிந்திருந்தால் நிச்சயம் வித்தியாசாகர் செய்திருக்க (அடித்திருக்க) மாட்டார். அடித்தார் என்று தெரிந்ததினாலே அவர் நிச்சயம் கோபப் படப் போவதில்லை. அவருடைய தயவு இல்லை என்றால் வித்தியாசாகர் அடித்திருக்கமாட்டார். வித்தியாசாகருக்குப் பரமகுருவின் பக்கபலம் இல்லையென்று சொன்னால் அடித்திருக்கமாட்டார். இப்படி மூன்று பக்கம் எழுதுகிறார் நீதிபதி இஸ்மாயில்!

வித்தியாசாகர் மீதும், அவரது கூட்டாளிகள் மீதும் இந்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா? எடுக்காதா?

......வித்தியாசாகரைத் தண்டித்து அதே சென்ட்ரல் ஜெயிலுக்கு அனுப்ப வேண்டும். அதே 9-வது பிளாக்கில் வைக்க வேண்டும். நடக்குமா? நடக்கும்.

நாம் கேட்கிறோம் — மூன்று போலீஸ் அதிகாரிகள். எமர்ஜன்சி காலத்திலே கமிஷனராக இருந்த செந்தாமரை, எமர்ஜன்சி காலத்திலே ஜெயில் ஐ. ஜி.-யாக இருந்த பரமகுரு, அடிசனல் ஐ.ஜி.-யாக இருந்த கிருஷ்ணசாமி —இந்த மூன்று பேர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

—வழக்கறிஞர்

பாளையங்கோட்டை சண்முகம்

தொலைபேசி: கடை: 33213. இல்லம் 31922
காம்நாடுவோர்தவறுமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்தி மிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், மருந்து கடலை நவதானியம் மற்றும் இனிப்பு காரவகைகள்
உரிமையாளர் பெ. தேவசகாயம்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி 72. அழகர்கோவில் சாலை. 72-C டவுன்ஹால்ரோடு, மதுரை.

சொல்லத்துடிக்குதடா நெஞ்சம்!

-: தென்னகன் :-

மறு பரிசீலனை நடக்கிறதாம்!

எண்ணத்தை எரிமலையாக்க, இப்படியொரு செய்தியை மத்திய அமைச்சர் ஒருவர் அறிவித்திருக்கிறார்

சிந்தனை வாதங்களின் தந்தை, சீர்திருத்த உலகத்தின் முடிசூடா மன்னன், அறிவுலக மேதை தந்தை பெரியாருக்கு அஞ்சல் தலை வெளியிடும் அறிவிப்பு மறு பரிசீலனை செய்யப் படுகிறதாம்!

நடமாடும் மனிதப் புழுக்களாக "நாலும் அறிந்தவர்கள் நாங்களே' என்று தங்களைத் தாங்களே உயர்த்திக் கொண்டோர்களால் ஆக்கப்பட்ட ஒரு மாபெரும் சமுதாயத்தை 'நாங்களும் மனிதர்களே என்று உரிமை முழக்கம் செய்யவைத்த ஒரே தலைவனுக்கு அஞ்சல் தலை வெளியிடும் அறிவிப்பு மறு பரிசீலனை செய்யப்படுகிறதாம்!

'காலில் பிறந்தவனே! கடையனே! எங்கள் காலில் இருக்குதடா மோட்சம்' என்று கால காலமாய் ஏமாற்றி, வாழ்வில் ஏற்றம் பெற்றோர்களைப் பார்த்து, 'அறமல்ல; இது அறமல்ல' என்று எச்சரிக்கைவிடுத்து, ஏதுமறியாமல், எலிகளாய் வாழ்ந்த இனத்தை எழுச்சி கொள்ளவைத்த ஏந்தலுக்கு அஞ்சல் தலை வெளியிடும் அறிவிப்பு மறு பரிசீலனை செய்யப்படுகிறதாம்!

'மதங்களைக் காட்டி மயக்காதே; சாதியைக் கூறிச் சாய்க்காதே; புராணங் கூறி ஏய்க்காதே; பொய்மை பேசி இன்பம் துய்க்காதே' என்று சனாதனிகளின் சந்ததியினரை வந்த வழிப்போகச் செய்த அறிவு வள்ளல் அய்யாவுக்கு அஞ்சல் தலை வெளியிடும் அறிவிப்பு மறு பரிசீலனை செய்யப்படுகிறதாம்!

தமிழனைத் தமிழனாக, மனிதனை மனிதனாக நடமாடவிட்ட தன்மானத் தலைவனுக்கு அஞ்சல் தலை வெளியிடும் அறிவிப்பு மறு பரிசீலனை செய்யப்படுகிறதாம்!

காரணம் என்ன?

அவர் ஒரு நாத்திகர்!

அரிய கண்டுபிடிப்பு; புதிய ஆராய்ச்சி; உலகத்திற்கே தெரியாத ஓர் உண்மை இப்போதுதான் சிலரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது!

'பெரியார் ஒரு நாத்திகர்; எனவே அஞ்சல் தலை வெளியிடக்கூடாது' என்று அக்கிரம ராகங்கள் சிலரால் எழுப்பப்பட்டதாம்!

கடுமையான கண்டனங்கள்; எண்ணற்ற எதிர்ப்புகள் சிலரால் கிளப்பப்பட்டனவாம்!

தேரைகள் சில கத்தினவாம்; எனவே தேரோட்டம் நின்றதுவாம் என்பதுபோல், அடையாளங் கூற முடியாத சில வயிற்றெரிச்சல் 'பார்ப்பு'களும், வந்த இடங்களையெல் தங்கள் சொந்த இடங்களாக வளைத்துப் போட்டுக் கொண்டவர்தம் வழிகளும் எதிர்த்தன என்பதற்காகப் பெரியார்க்கு அஞ்சல்தலை வெளியிடும் அறிவிப்பு மறுபரிசீலனை செய்யப்படுகிறதாம்!

அப்படியென்ன நாத்திகம் என்பது தடை செய்யப்பட்ட கருத்தா? கொலைக்குத் தூண்டும் கொள்கையா? தேசிய நீரோட்டத்திற்கு எதிர்ப்பானதா? ஒருமைப்பாட்டுக்கு உலை வைப்பதா? நாட்டைப் பிளக்க, நலங்களைச் சாய்க்க வழிவகுப்பதா?

மத்திய அரசு விளக்கந்தர வேண்டிய இடத்தில் இருப்பதால் கேட்கிறோம், நாத்திக நெறியின்மேல் சாட்டப்படும் குற்றமென்ன?

நாத்திகர்கள் இந்த நாட்டுக் குடிமக்களா, இல்லையா? நாத்திகர்கள் இந்தியர் என்னும் சொல்லுக்கு உரிமை உள்ளவர்களா, இல்லையா?

நாத்திகர்களுக்கு வரிகொடுக்கும் உரிமை உண்டா? இல்லையா?

நாத்திகன் நாடாளக்கூடாது என்று சட்டம் செய்யப்பட்டுள்ளதா? இல்லை, செய்யப் படப் போகிறதா?

நாத்திகன் சட்டமன்ற உறுப்பினராக ஆக முடியுமா? முடியாதா?

நாத்திகன் அமைச்சராக ஆகலாமா? கூடாதா?

விளக்கம் எதற்கு? நாத்திகன் இந்த நாட்டில் உயிரோடு வாழ உரிமை படைத்தவனா, இல்லையா?

எங்கோ இருந்து இரண்டொருவர் சீண்டி விட்டனர் என்பதற்காக சிந்தனைவேந்தன், எங்கள் இனத்தந்தை அறிவுப் பகலவன் பெரியார்க்கு அஞ்சல் தலை இல்லை என்பதற்குள், இந்தக் கேள்விகளுக்கு விடைகூற வேண்டிய பொறுப்பு, இரண்டாவது சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்!

இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக எண்ண முடியாத இன்னல்களைப் பெற்றவர் தந்தை பெரியார் என்பதுகூட மறந்துவிடக் கூடியதுதானா?

'வைக்கம் வீரர்' என்ற வரலாற்றைக் கூட மறந்துவிடுவது தேவைதானா?

மதுவிலக்குக் கொள்கை வழி நிற்பதற்காக ஆயிரமாயிரம் தென்னை மரங்களை வெட்டி வீழ்த்திய வீரர் பெரியார் என்பதனை மறந்துவிடுவது மனிதத் தன்மைதானா?

எல்லாமே போகட்டும் அறுபதாண்டுக்கு மேலும் சிற்றூர், பேரூர் என்றெல்லாம் பாராமல், காடு—மேடு என்று எண்ணாமல் சுற்றிச் சுற்றித் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஓடி ஓடி உழைத்த உத்தமனுக்கு மனித உள்ளம் படைத்தவர்கள் கொடுக்கும் காணிக்கையா இது?

தொண்ணூற்று ஏழுபேர்க்குத் தொண்டு செய்த தூயவருக்கு, மூன்று பேர்களின் எதிர்ப்புக்காக அஞ்சல் தலை அறிவிப்பை மூலையில் போடுவது என்ன வகையான நியாயம்?

மதபேதம் கடந்த மனத்தவர்;

மொழிபேதம் பாராத மூத்தவர்;

இனபேதம் இல்லாத இயல்பினர்;

நாட்டு வேறுபாட்டை நாடாத நல்லவர் என்றெல்லாம் உலகமே ஏத்திப் புகழும் ஒருவரை நாத்திகர் என்றுகூறி அவர்க்குத் தரவிருக்கும் — தரவேண்டிய பெருமையைத் தடுக்க நினைப்பதுதான் ஆத்திகம் என்றால் அந்த ஆத்திகத்தின் வாழ்வு எத்தனை நாள்?

அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பினைச் செய்துள்ள எந்த மனிதன் எல்லோராலும் போற்றப்பட்டவன்? அனைவராலும் போற்றிப் புகழப்பட்டவர் இவர் என்று எவரையாவது காட்ட முடியுமா? காந்தியை எதிர்த்தவர்கள் இல்லையா? நேருவை ஏற்காதவர்கள் இல்லையா?

எவரைத்தான் இந்த நாடே ஏற்றுக் கொண்டது?

அப்படியிருக்க, எவரோ எதிர்க்கின்றார்கள் என்று காரணம் காட்டுவது என்ன நியாயம்?

மத்திய அமைச்சர் ஒருவர் திறந்துவைத்த சிலையைக் கங்கை நீர் ஊற்றித் தூய்மை செய்த கல்நெஞ்சக்காரர்களின் கால்வழியினர் மறுக்கிறார்கள் என்பதற்காக மறு பரிசீலனை செய்வது அறிவுடைமைதானா?

எதுவுமே வேண்டாம்! 'பகவத் சிங்' பழுத்த நாத்திகனாயிற்றே; தூக்கு மரத்தில் தொங்கித் துடித்தபோதும் 'சுதந்திரம், சுதந்திரம்' என்று முழங்கிய அந்த நாத்திக நம்பிக்கு அஞ்சல் தலை வெளியிடும்போது எங்கள் அய்யாவுக்கு வெளியிடுவது தவறா?

நேரு அவர்கள் பஜனை செய்த பக்தரா? இல்லையே! தன்னை ஒரு நாத்திகனாக உலகிற்கே அறிமுகப்படுத்திக் கொண்ட அந்த நேர்மையாளனுக்கு அஞ்சல் தலை வெளியிட்டு மகிழ்ந்த மனம், எங்கள் இனத் தந்தைக்கு என்றால் மட்டும் மறுக்கலாமா?

மடல் எழுதினார்கள்; மறுப்புத் தெரிவித்தார்கள்; எதிர்த்து எழுதினார்கள் என்பதற்காக, இன்றைக்கு எங்கள் தந்தைக்கு அஞ்சல் தலை வெளியிடுவது மறுக்கப்படுமேயானால், நாளைக்குஇந்தநாட்டில்எந்தக் கொம்பனுக்கும் அஞ்சல் தலை வெளியிட முடியாது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

ஏன்? தகுதியில்லாதவர்; தரமில்லாதவர் என்றெல்லாம் ஆயிரமாயிரம் மடல்களை மத்திய அரசு சந்திக்க நேரும்!

ஆயிரமாயிரமாய் எதிர்ப்புக் கடிதங்களைப் பெற நேரிடும்!

எந்த மேதாவியாக இருந்தாலும், எதையாவது சொல்லி எதிர்க்க எங்களாலும் முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்!

புதியதாக இன்று எழுப்பப்படும் முன் உதாரணம் சட்டம்போல் ஆனால், பிறகு அந்தச் சட்டத்திற்கு எந்த அரசும் கட்டுப்பட்டாக வேண்டும்!

தந்தை பெரியார் வழியில் உண்மையாகவே செல்லுபவர்களைத் தந்தை பெரியாரை உண்மையாகவே போற்றிப் புகழ்பவர்களைத் தந்தை பெரியார் விட்டுச் சென்ற பணிகளைத் தலையைக் கொடுத்தேனும் நிறைவேற்றுவோம் என்னும் நெஞ்சினரைப் பொட்டுப் பூச்சிகள், புன்மைத் தேரைகள், விட்டில் பூச்சிகள் என்று எண்ண வேண்டாம்!

அவர்கள் நாமத்தை வாழ்த்தி, கொள்கைக்கு நாமம் போட்டு ஏய்ப்பவர்கள் அல்லர்!

சிலையை எடுத்து கொள்கைக்குச் சமாதி கட்டும் சதிகாரர்கள் அல்லர்!

மத்திய அரசு ஜனநாயகத்தைக் காத்த அரசு! இழந்த சுதந்திரத்தை மீட்டுத்தந்த அரசு என மனமார நம்புகிறோம்!

பெரியார் நூற்றாண்டு விழா நாளில் அஞ்சல் தலை வெளியிட்டுப் பெருமை பெறுவார்கள் என்று நம்புகிறோம்!

அரசுக்கும் இது அழகு!

அஞ்சல் தலைக்கும் இது பெருமை!

மொழிப்பற்றுடனே

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே ஈடிணையில்லா இலக்கியச் செல்வங்களைப் பெற்றெடுத்த பெருமைக்குரிய மொழியைப் பேசிடும் தமிழர் இன்றும் உலகில் வழங்கிடும் எட்டாயிரம் மொழிகளிலும் இன்றமிழுக்கு இணையில்லை என்பதனை உணராதிருக்கின்றனர். நியுகினியாவில் பேசப்படும் அபு மொழியில் இருந்து ஜுலு மொழிவரை ஈராயிரம் மொழிகளில் பைபிளை இறித்தவ சமயத்தார் மொழி பெயர்த்து வைத்திருப்பதைப் போலத் தீந்தமிழின் கருவூலங்களைப் பிற நாட்டார்க்குப் பரப்பியாகல் வேண்டும் என்று உணர்வு கொளுத்தப் பெறுத நிலையில் அறியாமையில் அழுத்தப்பட்டுள்ளனர். பிரிட்டிஷ் பைபிள் சங்க நூலகத்தில் ஈராயிரம் மொழிகளில் பெயர்க்கப்பட்ட பைபிள் காட்சி தருவதைப் போலத் தமிழக நூலகங்களில் ஈராயிரம் மொழிகளில் பெயர்க்கப்பட்ட திருக்குறளைக் கண்ணுறும் காலமே கவின்தமிழர் புகழோங்கும் பொற்காலமாகும். அத்தகு பொற்காலம் காணப் புத்தெழுச்சி ஊட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தை விட்டால் நாட்டில் நாதியில்லை என்பது வெள்ளிடைமலை. தமிழோங்க தி. மு. கழக மோங்கியாக வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்.

போமாயின் எதிர்காலத் தமிழகம் இருளில் மூழ்கும்.

உலகில் மனிதனின் நாவில் பயிலும் மொழிகளின் எண்ணிக்கை எட்டாயிரத்திற்கும் கூடுதலாகும். சிற்றூர் ஒன்றேடு சிறைப்பட்டு இருக்கும் மொழியுமுண்டு. ஆற்றுப் படுகை ஒன்றில் மட்டும் அரசோச்சும் மொழியுமுண்டு. விரல் விட்டு எண்ணக் கூடியோர் வழங்கும் மொழியுமுண்டு. பன்னுடுகளில் பரவி நிற்கும் மொழியுமுண்டு. எட்டாயிரம் மொழிகளிலே என்றும் இளமையுடன் நின்று நிலவும் தென் தமிழ் மொழியைப் பேசிடும் திராவிடப் பெருங்குடிகள் நாமென்பதனுல் பெருமைப்படுகிறேம்.

முந்தித் தோன்றி முழுதுலகாண்ட முத்தமிழ் மொழிக்குச் சொந்தக்காரர்கள் சோம்பிக் கிடப்பதால் பிந்தித் தோன்றிப் பேச்சு வழக்கு ஒழிந்து விட்ட மொழிக்காரர்கள் பேயாட்டம் போடுகின்றனர்கள்.

எட்டாயிரம் மொழிகட்கும் அதிகமாக இருப்பதாலே மனிதகுலம் பிளவுபட்டு கிடக்கிறது. மனித ஒருமைப்

காலத்தில் இப்புது மொழி முயற்சியைத் தோற்கடிக்கக் கூடிய வேறு வழிகளும் மனித குலத்திற்கு, புலப்பட்டிருக்கிறது.

தானியங்கி (கம்யூட்டர்)கள் பெரு வழக்குப் பெற்று வரும் காலத்தில் புது மொழி முயற்சி பின்னடைய நேர்ந்துள்ளது. தானியங்கி மொழியைப் பின்பற்றுவதன் மூலம் எம் மொழியைப் பேசுவோரும்

- நந்திவர்மன் -

பிறிதொரு மொழியில் உள்ள கருத்தை மொழி பெயர்த்து குறியீடுகள் வாயிலாக அறிந்து கொள்ளுதற்கேற்ற அறிவியல் வழி மனிதகுலத்திற்கு திறந்து விடப்பட்டிருக்கின்றது!

பிரஸல்சில் உள்ள ஐரோப்பிய பொருளாதாரக் கழகத்தின் செயலகத்தில் உடனுக்குடன் பல்வேறு மொழி பேசும் உறுப்பு நாடுகளின் படி நிகராளிகட்கு மலைபோல் குவியும் ஆவணங்களை-குறிப்

உலகின் மறு மூலையில் உள்ள சீனத் துருக்கிஸ்தான் வரை இலத்தீன் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதைப் பார்க்க முடியும். ஆனல், இலத்தீன் இன்று வழக்கிழந்து விட்டது.

கோயில்களில் குடியிருந்த இலத்தீன் மொழி இன்று அங்கிருந்தும் அப்புறப்படுத்தப்பட்டது. எம்மொழியும் மாதா கோயில்களில் இடம் பெறலாம் என்ற நிலை மலர்ந்துள்ளது.

இங்கோ செத்துவிட்ட வடமொழியே கோயில்களில் உளறப்பட வேண்டும் என்பது மாறவில்லை—தவிர மாற்ற முடிவதில்லை.

பைந்தமிழ்ப் பாசுரங்களின் பக்திச் சுவையில் மெய்மறப்போர்கூட வடமொழிக்கு வாதாடுவதில் வல்லமை காட்டி வருகிறுர்களே ஒழிய வண்டமிழை வளப்படுத்த எண்ணம் காட்டுகிறுர்கள் இல்லை.

பிரெஞ்சு மொழி உலகம் அளாவிய மொழியாக நின்ற நிலை மாறி ஆங்கிலம் அவ்விடத்தைக் கைப்பற்றிவிட்ட காலத்தில் நாம் வாழுகின்றேம்.

தமிழ் தோன்றியபோது பிறந்தே இராத இம்மொழிகள் பெரு வழக்கும் செல்வாக்

கல்தோன்றி மண்தோன்றுக் காலத்தே முன் தோன்றிய தமிழினம் இந்தப் புறப்பொருள் வெண்பா மாலை வரிகள் பொருள் பொதிந்தவையாக இருப்பது கண்டு இறும்பூது எய்த முடிகின்றது. இன்றும் தென்னர்க்காடு மாவட்டத்தில் குன்னம் கிராமத்தில் கிடைக்கும் கறுப்புக்கல் — கரும்பளிங்கு உலகின் மிகப் பழமையான பாறைகளில் இருந்து வெட்டப்படும் காரணத்தால் சப்பானியராலும் இத்தாலியராலும் விரும்பி வாங்கப்படுகின்றது. ஆப்பிரிக்க மலைகளின் பாறைகளை விட உலகின் தொன்முது பாறைகள் இந்தத் தமிழகத்தில்தான் உள்ளன என்ற உண்மை புறப்பொருள் வெண்பா மாலை வரிகளை எண்ணிப் பார்க்க வைக்கின்றது.

முதல் மாந்தனின் பிறந்தகமாம் தமிழ் நிலத்தில் பிறந்திட்ட தன்னேரில்லாத் தமிழ் பன்னூறு மொழிகளுக்கும் சொற்களை வாரி வாரி வழங்கி இருக்கின்றது. நாவாய் Navy என்றும், அரிசி Rice என்றும் ஆனது பற்றி அடுக்கடுக்காகச் சொல்லுதல் இயலும்,

Hello என்ற சொல் தமிழகத்தில் இருந்தே சென்றுள்ளது. தொல்காப்பியத்தில் 'எல்லா' என்றொரு விளிச்சொல் இடம் பெற்றுள்ளது. இந்தச் சொல்லே பிற்காலத்தில் திருப்பாவை — திருவெம்பாவையில் இடம்பெறும் நாட்களில் 'எல்லே இளங்கிளியே" என்பதாக வருவதைக் காண்கின்றேம். தற்போதுகூட கொச்சை மொழியில், "எலே! பயலே!" என்று கூப்பிடக் காண்கிறேம். இந்தச் சொல்லின் ஆங்கில வடிவே Hello! என்று ஆகிறது. தொலைபேசியைக் கையில் எடுத்தவுடன் தொலைவில் உள்ளவரை விளிக்கும் இச்சொல்லை தூய தமிழே கடன் தந்துள்ளது என்று நாம் பெருமைப்பட முடியும்.

பெருமைப்படுவதாலே நாமடைந்த சிறுமைகளை இந்த நேரம் எண்ணிப் பார்க்காதிருக்க முடியவில்லை. எத்தனையோ சொற்களை பிறமொழிகட்குத் தந்திட்ட வள்ளற்றன்மை பெற்ற தமிழ் இன்று இரவல் பெற்றுக் கையாளும் வேற்று மொழிச் சொற்களின் எண்ணிக்கையும் எண்ணும் போது வேதனைதான் வெடித்துக் கிளம்புகிறது.

உலகப் பொது மொழி ஆகியிருக்க வேண்டிய ஒரு

(8-ம் பக்கம் பார்க்க)

விழிப்புற்றெழவே!

மலேசியத் தமிழறிஞர் சூசை அண்மையில் மலாய் மொழியில் திருக்குறளை மொழி பெயர்த்திட்டார். தற்போது பாவேந்தரின் படைப்புக்களை மொழியாக்கம் செய்வதில் ஈடுபட்டுள்ளார். இதுபோல் இனத்தலைவர் கலைஞரின் இலக்கியச் செல்வத்தைப் பிரெஞ்சு மொழியில் பெயர்க்கும் பணியில் சகோதரி தெரேசு பாண்டியன் ஈடுபட்டுள்ளார். பைந்தமிழின் பெருமை பாரெல்லாம் பரவ இதுபோன்ற முயற்சிகள் எண்ணற்றவை நிகழ்ந்தாக வேண்டும்.

செத்த மொழிக்குச் சிறப்புச் சேர்க்க முயலுவோரின் ஈனச் செயலைக் கண்ட பின்னரும் உலகின் சிறந்த மொழிக்குரிய நாம் செயலற்றுக் கிடப்

பாட்டை உருவாக்கப் பொது மொழி—புது மொழி ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அறிஞர்களிடத்தில் அரும்பியது.

மண் ஒருமைப்பாட்டிற்காகக் குரல் கொடுப்போர் இந்நாட்டில் மனிதகுல ஒருமைப்பாட்டைப்பற்றி எள்ளளவும் எண்ணுவதே இல்லை.

பொது மொழியாக புது மொழி ஒன்று காண வேண்டும் என்றுதான் மேனுட்டு அறிஞர் பெருமக்கள் எண்ணினர்களே ஒழிய தத்தமது மொழியே தரணியெங்கும் திணிக்கப்பட வேண்டும் என்ற வாதத்தை எடுத்து வைக்கவில்லை என்பதை நாம் மறக்கக் கூடாது.பத்தொன்பதாம் நூற்றுண்டு முதலே உலகப் பொது மொழி ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கருத்து அறிஞர்களிடம் வேரூன்றி வந்திருக்கின்றது.

போலந்து நகாட்டுக்காரரான லுட்விக்ஜமான் ஹாப்பத்தொன்பதாம் நூற்றுண்டில் உலகப் பொது மொழியாகத் திகழச் செயற்கை மொழி ஒன்றைப் படைத்தார்.

எஸ்பிராண்டோ (Esperanto) என்ற அம்மொழியைப் பேசுவோர் பதினைந்து மில்லியன் மக்கள் என்றும் இலண்டனில் மட்டும் இம்மொழி அறிந்தோர் தொகை பத்தாயிரம் என்றும் அம்மொழி ஆய்வலர்கள் அள்ளித் தரும் புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன.

பொறியியல் நாகரிகம் மிகு வளர்ச்சி எய்தி வரும்

புக்களை—சட்டங்களை—கம்யூட்டர் வாயிலாக மொழி பெயர்த்துத் தர முடிகின்றது,

இலக்சம்பர்க்கில் பத்தாயிரம் சொற்களுக்கு இணையான மொழி பெயர்ப்பை ஒரு பொத்தானைத் தொட்டவுடனே ஆறு மொழிகளில் மொழி பெயர்த்தளிக்கும தானியங்கி பராசக்தி அருளால் கண்டு பிடிக்கப்படவில்லை.

காளி தோன்றி சூலாயுதத்தால் நாவில் கீறியதால் இத்தகு அறிவை அந்தத் தானியங்கி பெற்றிடவில்லை.

உமையாளின் பாலைப் பருகி மூன்று வயதுப் பாலகனை ஞானசம்பந்தர் பாடிய அற்புதம்போன்ற தல்லதானியங்கி மொழி பெயர்க்கும் தன்னிகரில்லா ஏற்பாடு!

மனிதனின் அழிவின் பயனாக இம்மண்ணுலகு பெற்ற மாபெரும் பயன்களில் ஒன்று தானியங்கி, எனலாமே தவிர கடவுளின் கண்டு பிடிப்பாக அதனைக் கருதுதல் இயலாது.

நாமோ ஆயுதங்கட்கு பூசையிடக் கற்றுக்கொண்டிருக்கிறேமே தவிர அற்புதக் கருவிகளை உருவாக்கும் அறிவியல் ஆற்றலைப் பெற்றேமில்லை.

தானியங்கிகளின் ஆற்றலோடு எதிர்நின்று நம் தாய்த் தமிழை வளர்த்தாக வேண்டிய கால கட்டத்தில் நாம் நின்றுகொண்டிருக்கிறேம்

ஒரு காலத்தில் இலத்தீன் உலகப் பொது மொழியாகத் திகழ்ந்தது. பெருநாட்டு மாதா கோயில்களில் இருந்து

கும் பெற்றுள்ளதைத் தமிழன் எண்ணிப் பார்க்க வேண்டாமா? காரண காரியத்தை அலசி ஆய்ந்தாக வேண்டாமா? உலகின் முதல் மாந்தன் பேசிய மொழி உலகப் பொது மொழியாக முடியாமல் போவதற்காக ஒவ்வொரு தமிழனும் வெட்கப்பட வேண்டாமா?

இலக்கியச் சான்றுகள் வாயிலாக மட்டும் நிறுவப்பெற்ற இலெமூரியாக் கண்ட உண்மை இன்று அறிவியல் முறைப்படியும் ஆணித்தரமாக நிறுவப்பட்டுவிட்டது.

'Theory of the Continental Drift" என்ற கண்டங்களின் சுழற்சி பற்றிய கொள்கை மாந்த குலத்தில் பிறப்பிடமாம் குமரிக்கண்டம் இருந்த உண்மையை அறிவியல் முறைப்படி நிறுவியிருக்கிறது.

நம் நாடு

சந்தா விபரம்

ஓராண்டு சந்தா ரூ. 20.00
ஆறுமாத சந்தா ரூ. 10.00

ஆறு மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிர்வாகி,
நம் நாடு,
அன்பகம், சென்னை-600018

உதயசூரியன் மோதிரம்

1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பல்லாயிரக்கணக்கான இயக்க தோழர்களின் கரங்களில் கலையாழியாக திகழ்ந்த உதய சூரியன் மோதிரத்தை பேரறிஞர் அண்ணாவும், தமிழகத் தலைவர் கலைஞரும் கண்டு பூரிப்பு அடைந்தார்கள். மீண்டும் அந்தவெற்றிச் சின்னம் உதய சூரியன் மோதிரத்தை முழுதும் பஞ்சலோகத்தால் தயாரித்து வாழ்க கலைஞர்' என்று பொறித்து தருகிறேம். ஒரு மோதிரம் விலை ரூ. 15.00 தபால் செலவு 3-50 தனி. உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து ரூ. 3.00 அட்வான்சுடன் அனுப்பினுல் மீதித் தொகைக்கு மோதிரத்தை V.P.P. மூலம் அனுப்புகிறேம்.

சக்தி ஜி. சம்பந்தன்
42, பள்ளிக் கூடம் தெரு,
பட்டாபிராம், சென்னை-600072

சென்னையில் கீழ்கண்ட விலாசத்தில் நேரில் சென்றும் மோதிரத்தை பெற்றுக்கொள்ளலாம்.
போட்டோ விஷன்,
104, C. N. K. ரோட் - சென்னை-5
CINEMA SLIDE, OUTDOOR FLASH PHOTOS ETC.

சுமந்தவள்....

(தொடர்ச்சி)

அண்ணு திருப்தியோடுபெண் கொடுப்பார்கள்?''

"பணக்கார வீட்டுப் பெண்—படித்த பெண் வேண்டாமே! உன் அண்ணி சொல்வது போல டெய்லர் ஏகாம்பரத்து மகள் மரகதத்தைக் கட்டிவிட்டால் என்ன?''.

"நல்ல வேடிக்கை! சந்திரன் தம்பி சேகருக்குப் பெரிய இடங்களில் பெண் கிடைக்கவில்லை. காரணம்; மாப்பிள்ளை வேலை எதுவும்பார்க்கவில்லையென்று பணக்கார வீடுகளில் மறுத்து விட்டார்களாம்— என்று ஊரெல்லாம் பேசுவார்கள். வேண்டாம் அண்ணு! அப்பா வைத்து விட்டுப்போன சொத்திலே வாழ்க்கை நடத்தாமல் உன்னைப்போல நானும் மாதம் நாலுகாசு சம்பாதிக்கிறேன். அதற்குப் பிறகு பெரிய வீட்டுப் பெண்ணை எனக்குக் கிடைக்கும்!''

"மரகதம், தங்கமான பெண். அவளைத்தான் உனக்குக்கட்ட வேண்டுமென்றுஉன் அண்ணி துடியாய்த் துடிக்கிருள். அண்ணியின் மனம் கோண நீ நடக்க மாட்டாய் என்று நம்பியிருக்கிருள். பிறகு உன் இஷ்டம்!''

"அண்ணி! என் மீது உனக்கு வருத்தமா? நான் சொல்வது உனக்கும் புரியவில்லையா; அண்ணி!"

"சௌந்தரி! சேகரிடம் நீயே பேசு! என் உயிரை வாங்காதீர்கள். நீங்களே ஒரு முடிவு செய்யுங்கள். நான் வருகிறேன்!"

"சேகர்! பார்த்தாயா உன் அண்ணு வருத்தத்தோடு போவதை! எங்கள் மனம் குளிர நீ திருமணம் செய்து கொண்டால் என்ன குடி முழுகிவிடும் தம்பி?"

"அண்ணி! போயும் போயும் டெய்லர் ஏகாம்பரத்தின் பெண்ணையா? பரம ஏழை அவன்! அந்த ஐதர்காலத்து தையல் மிஷின்தான் அவனுக்குச் சொத்து!"

"ஆனால் தையல் மிகவும் அழகப்பா?

"அந்தத் தையலை நீதான் புகழ வேண்டும். சட்டை தைக்கக் கொடுத்தால், பையை முதுகில் வைப்பான்; கையைக் கழுத்தில் வைப்பான்!"

"நான் சொல்வது அவன் தையலையல்ல தம்பி! அவன் பெற்ற தையல் இருக்கிருளே மரகதம்—அவளைச் சொல்கிறேன். அவள்கூட எவ்வளவு அழகாகச் சோளி ரவிக்கையெல்லாம் தைக்கிருள் தெரியுமா? இப்போது எனக்கு வேண்டியதையெல்லாம் அவள் தான் தைத்துத் தருகிருள். தம்பி! மரகதம் ரொம்ப நல்ல பெண். உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள அவளுக்குக் கொள்ளை ஆசை. உன்பேச்சை எடுத்தாலே நாணிக்கோணிப் புன்னகை புரிவாள். அடடே உனக்குக் கூட வெட்கம் வந்துவிட்டதே! சரி... சரி... உனக்கும் ஆசையிருக்கிறது. அண்ணனிடம் சொல்லக் கூச்சப்பட்டுக்கொண்டு இத்தனை நாளும் மறுத்திருக்கிருய். தம்பி! சேகர்! சொல்லு திருமண ஏற்பாட்டையெல்லாம் கவனிக்கும்படி உன் அண்ணனிடம் சொல்லி விடட்டுமா?"

"சரியண்ணி; எல்லாம் உங்கள் இஷ்டம்''

டெய்லர் ஏகாம்பரத்தின் பெண்ணுக்கு அதிஷ்டம் அடித்தது என்று உற்ருர் உறவினர் பேசிக் கொண்டார்கள். யார் கட்டப் போகிருர்கள் இந்த ஏழை வீட்டு எழிலரசியை என்று வாய்ப்புக்கிட்டாதவர்கள் எல்லாம் வாய் பிளந்து கிடந்தார்கள். இப்போது அவர்கள் வாய் மூடிற்று.

சேகரும் மரகதமும் வாழ்க்கைச் சகடத்தைச் சேர்ந்து உருட்டத் தலைப்பட்டார்கள். மரகதத்தின் அன்பும் பண்பும் குடும்பப் பொறுப்பை உணர்ந்து அவள் நடந்து கொண்ட தன்மையும் சேகரின் மனதில் இன்பத்தைப் பொழிந்த வண்ணமிருந்தன.

மரகதம் வீட்டுக்கு வந்த பிறகுதான் அதுவரையில் வீட்டில். குடும்பத்தில் ஏதோ ஒரு பெரிய குறை இருந்தது அவனுக்குப் புரியத் தொடங்கியது.

அண்ணனும் அண்ணியும் மன நிறைவோடுதான் வாழ்ந்து வருகிருர்கள் என்று அவன் எண்ணியிருந்தான். மரகதம் வந்த பிறகுதான் குடும்ப வாழ்க்கை எப்படியிருக்க வேண்டுமென்ற இலக்கணத்தை அவன் அறிந்து கொண்டான். தன்னுடைய வாழ்க்கைக்கும் அண்ணனுடைய வாழ்க்கைக்கும் இருக்கிற பெருத்த வேறுபாட்டை அவனால் உணர முடிந்தது. அதற்காக அவன் அண்ணன்மீது ஆழ்ந்த அனுதாபங் கொண்டான்.

வேலைகளை முடித்துக் கொண்டு வீடு திரும்புகிற சந்திரன் களைத்துப் போய் சாப்பாட்டு மேஜையருகே உட்காருவான். "எனக்கு ஒரே அலுப்பாய் இருக்கிறது! மரகதம்! சாப்பாட்டைக் கொஞ்சம் எடுத்து வைத்து விட்டுப் போ. அவர் போட்டுக் கொள்வார்!" என்று சௌந்தரி கூறுவாள்.

அதைக் கேட்டுச் சந்திரன் எந்த முக மாற்றமும் அடைவதில்லை. மரகதம்சந்திரனுக்கு நேராக அதிகமாகப் போக மாட்டாள். சாப்பாட்டை எடுத்துப் போய் மேசையில் வைத்துவிட்டு வந்துவிடுவாள். சந்திரன் தானே பரிமாறிக் கொண்டு பசியாறுவான்

மரகதம் வந்தபிறகு, வீட்டு வேலைக்காரிக்கும் சமையற்காரிக்கும் சம்பளம்கணக்குத் தீர்க்கப்பட்டு அவர்கள் அனுப்பப்பட்டார்கள். எல்லா வேலைகளுமே மரகதத்தின் தலையில் விழுந்தன.

சௌந்தரியின் நோக்கம், மரகதத்திற்குத் தெளிவாகப் புரிந்து விட்டது. தன்னைச் சேகருக்குத் திருமணம் செய்து வைக்கச் சௌந்தரி தலைகீழ் நின்றதற்குக் காரணமே வீட்டுக்கு ஒரு நல்ல வேலைக்காரியும் சமையற்காரியும் சம்பளமில்லாமல் கிடைப்பாள் என்பதற்காகத்தான். என்பதை மரகதம் உணர்ந்து கொண்டாள். அந்த மன உளைச்சலை அவள் தன் கணவனிடம் வெளியிடவில்லை. குடும்பத்தில் தன்னால் குழறல் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அவள் கொதிப்பை அடக்கிக் கொண்டு கூனிக் கிடந்தாள்.

சௌந்தரியோ அந்த வீட்டு மகாராணிபோல ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வந்தாள். மரகதம் படும் கஷ்டங்களைக் கண்ட சந்திரன், சௌந்தரியிடம் ஒரு நாள் மனம்விட்டுப் பேசிவிட்டான்:

"என்ன இருந்தாலும் அவளும் இந்தவீட்டு மருமகள்தானே! அவளை இப்படிக் கஷ்டப்படுத்தலாமா?'' என்று சௌந்தரியிடம் மெதுவாகக் கேட்டான், அடக்க உணர்ச்சியுடன்'!

"எனக்கு வேலை செய்வதற்காகத்தான் ஒரு ஏழை வீட்டுப் பெண்ணை உங்கள் தம்பிக்குக் கட்டிவைக்க நான் முயற்சி செய்தேன். இல்லாவிட்டால் எனக்கிருக்கிற உடம்புக்கு இந்த வீட்டில் வேலை செய்தால் சீக்கிரம் சாக வேண்டியதுதான்!' என்று கண்ணீர் வடித்தாள் சௌந்தரி.

"அழாதே! கர்ப்பஸ்திரி இப்படிக் கண் கலங்கக் கூடாது! மரகதமும் கர்ப்பமாயிருக்கிருளே. அளவுக்கு மீறி ஓய்வின்றி வேலைகளைச் செய்து கஷ்டப்படுவாளே யென்றுதான் சொன்னேன்!"

"அய்யோ பாவம்! தம்பி மனைவி மீது எவ்வளவு அக்கறை! அந்த அக்கறையில் பாதி என்னிடம் காட்டக் கூடாதா?"

—என்று முகத்தை நீட்டிக் கொண்டு சௌந்தரி எழுந்து போய் படுக்கையில் படுத்துக் கொண்டாள்.

பிறகு சந்திரன் சமாதானப் படலத்தை ஆரம்பிக்க, முதலில் சரணுகதிப் படலத்தில் வீழ்ந்தான்.

மரகதமும், சௌந்தரியும் ஒரு வார இடைவெளியில் அழகான பெண் குழந்தைகளுக்குத் தாய்களாயினர். தான் பெற்ற செல்வத்தின் அருகே படுத்திருந்த சௌந்தரியின் கண்கள் எதிரில் உள்ள சுவரில் மாட்டப்பட்டிருந்த அவளது திருமணப் படத்தின்மீது நிலைத்து நின்றுவிட்டன. சந்திரனுக்கு அருகே கட்டுக் குலையாமல் கனிமரமென நிற்கும் தன் அழகைக் கண்டு சௌந்தரி பெருமை கொண்டாள். பொன்னால் செய்த சிலைபோல் நிற்கின்ற தோற்றமும் — எடுப்பான உடற்கட்டும்—எழில் சிந்தும் முகமும்— அவளுக்குத் திடீரென ஏதோ ஒரு பீதியை ஏற்படுத்திவிட்டன என்பது அவள் முகத்தில் பளிச்சிட்ட விகாரத்திலிருந்து தெரிந்தது. உள்ளத்தில் புயல் ஆரம்பமாகிவிட்டது!

சௌந்தரி ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டாள். வயிற்றுக்குள்ளே இருந்த போதே அந்தக் குழந்தை அளித்த வேதனையால் ஏற்கனவே அவளது உடல் இளைத்துப் போய்விட்டது. இனி இந்தக் குழந்தை பால் என்ற பெயரால்வேறு அவள் இரத்தத்தையெல்லாம் உறிஞ்சி. அவளது உடற்கட்டையும் குலைத்துவிடும்.

"குழந்தைக்குப் பால்கொடுக்க ஆரம்பித்தால் எழிற்கட்டுக் குலைந்துவிடும் — இளமை அழிந்துவிடும்!' என்று அவள் இப்படி ஓர் அச்சம் ஊட்டும் அவலக் குரல் ஓநாயின் தொனியை வெல்லும் விதத்தில் அவள் நெஞ்சத்தின் ஒருமூலையில் எழுந்து, இரத்த அணுக்களில் எல்லாம் எதிரொலித்து. அவளை. நடுக்கம் கொள்ளச் செய்தது

எழுந்து நின்று நிலைக்கண்ணுடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். அறையில் மாட்டப்பட்டிருந்த ஹாலிவுட் சினிமா நடிகைகளின் அரை ஆடைப் படங்களை வைத்தகண் வாங்காமல் பார்த்தாள். முழங்கால் அளவுத் தண்ணீரில் நின்று கொண்டு முரளிதரனிடம் தாங்கள் இழந்த ஆடைகளைத் திரும்பக் கேட்கும் கோபியரின் படங்களைப் பொறுமையுடன் நோக்கினாள். மீண்டும் கண்ணுடியைப் பார்த்துக் கொண்டாள்.

நெஞ்சம் மீண்டும் புலம்பி விம்மியழுதது.

விழிகள் வேறு திசையில் திரும்பின. ஜன்னல் கம்பிகளின் இடைவெளியில் நுழைந்த பார்வை தூரத்தில் மாட்டுத் தொழுவத்தில் தாய்ப் பசுவிடம் பால் குடிக்கும் கன்றின்மீது விழுந்தது. கன்றின் முதுகில் தாய்ப் பசு தனது நாக்கினால் நக்கிக் கொண்டிருக்கிற காட்சியையும் அவள் கண்கள் கண்டன. தோட்டத்துச் சுவரின்பக்கம் 'கிரிச்' என்ற ஓர் ஒலி! அங்கே பார்த்தாள்:

குரங்குதன் குட்டியைத்தூக்கிக்கொண்டு மதில் மேலிருந்து மரத்திற்குத் தாவியது. கூடத்து மூலையில் "உச் உச்!' என்ற சபதம் கேட்டது. பார்த்தாள், அவர்கள் வீட்டு நாய்,தன்னுடைய ஐந்து குட்டிகளிடமும் தன் பால் சுரப்பிப்பையை ஒப்படைத்துவிட்டு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது. மேலே "மியாவ் மியாவ்": என்ற ஒலி காதைப் பிளந்தது. பார்த்தாள்; குட்டிகள் புடை சூழ வீட்டுப் பூனை பரண் மீது தன் படுக்கையை அமைத்துக்கொண்டு தன் குழந்தைகளின் சங்கீதத்தில் மெய்மறந்து கிடந்தது. அந்தப் பூனை அந்த வீட்டுக்கு வந்து இப்போது மூன்ருவது தடவையாக அரை டசன் குட்டிகளைப் போட்டுப் பால் கொடுக்கும் வேலையைக் கவனித்து வருகிறது என்பதும் அவளுக்குத் தெரியும்.

போர்க்களத்துக் கூச்சலில் எங்கேயோ ஒரு வீணையின்நரம்பு இலேசாக அதிர்ந்த ஒலிகேட்பதுபோல அவளதுஇருதயத்துப் பேய்க் கூச்சலிடையே ஒரு மெல்லிய குரல் அதிர்ந்தது.

"நாயும் பூனையும் மாடும் குரங்கும் கூடத் தங்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கின்றனவே... அவைகளுக்குள்ள தாய்மை உணர்ச்சிகூட உனக்குத் கிடையாதா?

அந்த ஈன சுரத்தை உடனே அடக்கிவிட்டு, வெறிச் சத்தம் காதைச் செவிடு படுத்தும் வகையில் முழங்கியது.

"நாயும் பூனையும் மாடும் குரங்கும் தம் பிள்ளைகளுக்குப் பால்கொடுக்கின்றன. ஆனால் அவைகளின் அழகு குலைவதைப் பற்றியோ — இளமை குன்றுவதைப் பற்றியோ அவைகளுக்குக் கவலை கிடையாதே! அவை கடற்கரையில் போய் நாலு பேரோடு உலாவப் போகின்றனவா? சினிமாவுக்கு நாள் தவருமல் செல்ல வேண்டியவைகளா; நண்பர்களுடன் 'பிக்னிக்' போக வேண்டிய சங்கடந்தான் அவைகளுக்கு உண்டா? எடுப்பும் சிறப்பும் பொருந்த அஜந்தா ஓவியங்களைப்போலவும். மாமல்லபுரத்துச் சிற்பங்கள் போலவும் ஆடையை நெகிழ விட்டுக் கொண்டு வாலிப பருவத்தின் வனப்பையெல்லாம் வாரியீந்தவண்ணம் விருந்துகளில் கேளிக்கைகளில் வந்து அமரும் பெரிய இடத்துப் பெண்களுக்கு நடுவே எள் முனையளவு இளமையையும் இழந்து விடாமல் காட்சியளிப்பதுதான் இந்தக் காலத்துப் பெண்களுக்குக் கவுரவம் அதைவிட்டுத் 'தாய்மை' என்ற ஓர் அர்த்தமற்றவார்த்தையைக் காப்பாற்றுவதற்காக நாலு பேர் மத்தியில் தலைகுனிந்து உட்கார்ந்து இருக்க வேண்டுமா? உன் எழிலைப் பார் மாம்பழமேனி படைத்தவளே மண்ணுக்கி விடாதே உன் பருவத்தின் பூரிப்பை!"

இறுதியில் இளமைக்கு வக்கீல் வேலை பார்த்த பேய்க்குரல் தான் வெற்றி பெற்றது. தாய்க்குகுரல் தந்தியறுந்த யாழ் போல் ஆயிற்று.

அதன் விளைவு மரகதம் தன் மகளுக்கு மட்டுமல்லாமல் சௌந்தரியின் செல்விக்கும் பால்கொடுக்கும்பொறுப்பை ஏற்றுக்கொண்டாள் இரண்டு குழந்தைகளுக்கும் அவளே தாயாக விளங்கினுள்

"ஏழைப்பெண் மரகதத்தைச் சேகருக்கு மனைவியாக்கியது எவ்வளவு நல்லதாயிற்று பார்த்தீர்களா" என்று, பரவசத்துடன் சந்திரனைத் தழுவினுள் சௌந்தரி.

அந்த அணைப்பில் அவன் கண்ட சுகத்தில் "நீ புத்திசாலியடி என் தங்கமே" என்று உளறினுன் சந்திரன்.

மழலை பருகிட வேண்டியதாய்ப் பாலை மருந்து பருகியது- பருவத்தின் பொலிவு குலையாத சௌந்தரி தன்னை கண்ணுடியில் ஏற இறங்கப் பார்த்துக் கொண்டு பெருமிதத்துடன் நாலுபேர் மத்தியில் நடந்தாள். கணவனுடன் கடற்கரைக்குச் சென்ருள்.

மரகதம் படும் கஷ்டத்தை இனியும் சகித்துக்கொள்ளச் சேகரன் தயாராக இல்லை. மரகதத்தை திருமணம் செய்து கொள்ள அவன் முதலில் விரும்பவில்லை என்பது உண்மைதான். அவள் அழகில்லாதவள் அல்ல. குடும்பத்திற்குத் தகுதியற்ற பெண்ணல்ல ஆனுல் ஏழை. அதனால் அவன் தயங்கினுன்.

ஏழைப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது கூடாது என்ற கொள்கை உடையவனல்ல அவன் தன்னுடைய வீட்டுச் சூழ்நிலைக்கு ஒரு பெரிய வீட்டுப் பெண் வந்தால்தான் அவள் மற்றவர்களுக்குச் சமமாக வாழ முடியும்; ஏழையாயிருந்தால் அடிமையாக வேண்டியது தான் என்றகாரணத்தினுலே தான் மரகதம்தன்னை விரும்புகிருள் என்று சௌந்தரி கூறிய பிறகு அவனையறியாமல் அவள் மீது ஒரு பிரியம் ஏற்பட்டுவிட்டது அந்த திருமணத்தில் வந்து முடிந்து இருவரும் ஒரு குழந்தைக்குப் பெற்றோராகவும் ஆகிவிட்டனர்.

அவன் எதிர்பார்த்தபடி மரகதம் அந்த வீட்டில் சர்வ சாதாரணமாக நடத்தப்பட்டாள் அண்ணனிடத்திலே வைத்திருக்கிற அன்புக்கும் மதிப்புக்கும் ஊறு தேடக்கூடாதே என்பதற்காகப் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமையைக் கடைப்பிடித்து வந்தான். அந்தப் பொறுமை அணையையும் உடைத்துக் கொண்டு ஒரு நாள் குமுறி யெழுந்து விட்டான்.

முதல் நாள் இரவு சந்திரனின் குழந்தைக்கு இலேசாகக் காய்ச்சல்,சேகர் குழந்தைக்கு வயிற்று நோய்.

இரண்டும் மாறி மாறி இரவெல்லாம் அழுது, தொல்லை கொடுத்துக்கொண்டே யிருந்தன. மரகதம் கண்ணை மூடவில்லை இரண்டு தொட்டில்களையும் ஆட்டுவதும் "ஆராரோ பாடுவதும் பிணிக்கு மருந்து தருவதும் தூக்கி வைத்துக் கொண்டு உலவுவதும்தான் அவளுக்கு இரவு முழுவதும் வேலை.

குழந்தைகள் போட்ட கூச்சலைக் காதிலே வாங்கிக் கொள்ளாமல் சந்திரனும் சௌந்தரியும் தங்கள் படுக்கையறையிலேயே வெகு நேரம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

அந்தக் கொடுமையைச் சேகரால் சகிக்க முடியவில்லை தன் மனைவி கஷ்டப்படுவதை நினைத்து அழுவதா? அல்லது பெற்ற குழந்தையைப்பற்றிக் கவலைப்படாமல் வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிற வன்னெஞ்சர்களை நினைத்து அழுவதா?

பொழுது விடிந்தது. குழந்தைகளோடு கஷ்டப்பட்ட மரகதம் விடிந்த பிறகு சற்று அயர்ந்து தூங்கி விட்டாள். அதனுல் சௌந்தரிக்கு பெட்காபி கிடைக்கவில்லை. ஆத்திரங் கொண்ட சௌந்தரி, மரகதத்தை மிகச் சூடான வார்த்தைகளில் போட்டு வறுத்து எடுத்தாள்.

மரகதம் எதுவும் பேசாமல் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கவலையெல்லாம் அந்தக் குடும்பத்தில் தன்னுல் எந்தக் கலகமும் வந்துவிடக் கூடாது என்பதுதான்

சௌந்தரியின் ஏசற்கணைகளுக்கு எதிர் நிற்க முடியாமல, திக்குத் தெரியாமல் திண்டாடும் மான்போல் மிரள மிரள விழிக்கும் மரகதத்தைக் கண்டு துடித்து விட்ட சேகரன் அண்ணியின் மீது எரிதழலென வார்த்தைகளை அள்ளி வீசினுன்

"மரகதம், எனக்கு மனைவி. உங்களுக்கு வேலைக்காரி அல்ல. உங்கள் குழந்தையை வளர்க்கும் பால்காரி அல்ல !''என்று உறுமினுன்.

"சரிதான் நிறுத்து! பெரிய ராஜகுமாரியைப் போய்த் திருமணம் செய்து விட்டாயாக்கும்' என்று சௌந்தரி செய்தகிண்டலுக்குச் சபாஷ் கூறி, சந்திரன் அங்கே வந்து விட்டான். சௌந்தரியால் சேதமடையாமல் கட்டிக் காக்கப்படும் பெளவனத்தின் நீங்காத அடிமையல்லவோ அவன்! ஆகவே அவள் பக்கம் நின்றுதான் நியாயம் பேசினுன்

அண்ணன் தம்பிகளுக்கிடையே வார்த்தைகள் முற்றிப்போய் கைகலப்பு வரையில்சென்று, இருவரும் துப்பாக்கிகளைத் தூக்கிக் கொண்டு மரண முகப்பு நோக்கி நடப்பதற்குத் துவங்கி விட்டனர். டார் வெடிக்கிற தோட்டா முதலில் யார் மார்பில் பாயப் போகிறது என்ற பயங்கரமான நிலைமை உருவாகி விட்டது.

அந்தச் சமயத்தில் குறுக்கே விழுந்து அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றும் தோல்வி கண்ட மரகதம், அறையில் போய் நிம்மதியாகப் படுத்துக்கொண்டிருந்த சௌந்தரியிடம் ஓடி, "எப்படியாவது இருவரையும் சமாதானப்படுத்துவோம் வா, "என்று அலறினுள்.

சௌந்தரி மரகதத்தின் தலைமயிரைப் பிடித்து இழுத்து அவள் கன்னத்திலே அறைந்து ஓ' வென்று கத்த ஆரம்பித்தாள்:

சின்ன புத்திக்கார நாயே! ஏழை வீட்டு எச்சில் இலையே! நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தது என் குற்றம் ,''

இப்படிப் படபட வென்று ஆவேசம் கொண்டு கத்திக் கொண்டிருந்த சௌந்தரி திடீரென்று இருமத்தொடங்கினுள். இருமல் நிற்கவில்லை. இருமி முடிந்ததும மயக்கம் வந்து விட்டது, சௌந்தரி கீழே விழுந்து விட்டாள்.

மரகதம் பயந்து போய், 'அய்யோ! ஓடி வாருங்கள் அய்யோ! ஓடி வாருங்கள்!'' என்று கூச்சலிட்டாள்.

குறிபார்த்த துப்பாக்கியுடன் நின்றுகொண்டிருந்த அண்ணனும் தம்பியும் பரபரப்புடன் ஓடி வந்தார்கள். சண்டையை மறந்து விட்டுச் சேகர், டாக்டர் வீட்டுக்குப் பறந்து சென்ருன்!

டாக்டர், நீண்ட நேரம் பரிசோதித்து விட்டு, "இது டி. பி.—எலும்புருக்கி நோய்! ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள் !" என்று மருந்து எழுதிக் கொடுத்து விட்டுப் போய் விட்டார்!

சௌந்தரி, விழித்துக் கொண்டு தான் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்!

மொழிப் பற்றுடனே...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழி உலவும் நிலப்பரப்பிலாவது ஒழுங்காகப் பேசப்படுகிறதா? என்ற கேள்வி பிறக்கிறது. இதற்குக் கிடைக்கக் கூடிய விடை வெந்தபுண்ணில் வேலெனப் பாய்கின்றது.

வந்தேறு குடிகள் வளமார் தமிழகத்தில் வாழ்வு பெறுகிருர்கள். வந்தேறிகளின் மொழியாம் வடமொழிக்கு வாதாடவும் சில இனப்பகைவர் இங்கிருக்கின்ருர்கள். வையம் ஆண்ட வண்டமிழ் மரபினரை வந்தேறி ஒருவன் ஆண்டிடும் அவலநிலை ஏற்பட்டுவிட்டது. நஞ்சு மெள்ள மெள்ளத் தலைக்கேறுவது அறியாமல் நாம் சிரித்துக் கிடக்கின்றோம்.

மொழிப்பற்றுடனே விழிப்புற்றெழுந்தாக வேண்டும். முண்டெழுந்த தீயினில் தன்னை மூழ்கடித்துக் கொள்ளும் அளவிற்கு மொழிக்காக தியாகம் செய்யும் மறவர்களை திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் இயக்கம் தவிர உலகில் வேறு எந்த இயக்கமும் பெற்றிருக்கவில்லை. அந்த அளவு மொழிப் பற்றை ஊட்டக் கூடிய அரசியல் இயக்கம் நந்தமிழ் மொழியை நாளும் புதுக்கி-நற் கருத்துக்களைச் செதுக்கி உலகப் பொது மொழியாகத் தக்க அளவு வலிவும் பொலிவும் பெற்றதாக மாற்றி-உலக அரங்கினில் மொழிகளுக்கிடையே தலைமை பீடத்திற்கேற்றி வெற்றி முரசொலிக்கும் வண்ணம் செயலாற்றுவோம். இனவெழுச்சித் தலைவர் கலைஞரின் இணையில்லாத எழுத்துக்களால் எழுச்சி பெறுவோம். எட்டப்பர் கூட்டத்தை ஆட்சியை விட்டு ஓட்டி எழிற்றமிழை சிறக்கச் செய்வோம். எங்கெங்கும் தமிழ்க் கொடி ஏற்றிக் களிப்போம்!

கேள்விக் கணைகளால்
திணறிய இந்திரா!

தன்னுடைய வீழ்ச்சிக்குப் பிறகு பத்திகை நிருபர்களைக் காணவே தயங்கி வந்த இந்திரா— ஆந்திர, கருநாடக மாநிலங்களில் அடைந்த வெற்றி மிதப்பில் பத்திரிகை நிருபர்களை அழைத்துப்பேட்டி அளித்தார்.

நிருபர்களின் கேள்விக் கணைகளால் இந்திரா எப்படியெல்லாம் திணறினர் என்பதைப் பாருங்கள்:

★

நிருபர்: நீங்கள் தேர்தலில் வெற்றி பெற்று, மீண்டும் பதவிக்கு வந்தால் யாரை முதலில் கைது செய்து சிறையில் அடைப்பீர்கள்? நெருக்கடி காலத்தில் சிறையிலிருந்தவர்களை மீண்டும் சிறைக்கு அனுப்புவீர்களா? அல்லது, அப்பொழுது உங்களுடன் இருந்து இப்பொழுது பிரிந்து சென்று விட்டார்களே, அவர்களையா?

இந்திரா: இவற்றைப் பற்றி வேடிக்கையாகப் பேசக் கூடாது.

நிருபர்: நீங்கள் மீண்டும் தலைமை அமைச்சராளுல் எத்தனை பத்திரிகை நிருபர்களைக் கைது செய்வதாக உத்தேசம்?

இந்திரா: (பதில் இல்லை)

நிருபர்: என் வீட்டை நான்கு முறைகள் சோதனை போட்டீர்கள். அவசர காலத்தில் சோதனை போட்டு என்ன கண்டுபிடித்தீர்கள்?

இன்னொரு நிருபர்: விடுதலைப் போராட்டம் என்பது முப்பது ஆண்டுகளுக்கு முன்பே முடிந்து விட்டது என்று நினைக்கிறோம்,

மற்றொரு நிருபர்: "சட்டம் குலைந்துவிட்டது" ஒழுங்கு குலைந்து விட்டது' என்று இப்பொழுதுள்ள நிலைமையைப்பற்றிக் கூறி வருகிறீர்களே! அபபடியானல், இப்பொழுது இந்தியாவில் ஒரு அவசர கால நிலைமை வருவதற்குத் தகுந்த சமயம் என்று கருதுகிறீர்களா?

இந்திரா- வந்து...உங்களுக்கு நெருக்கடி கால தொத்து நோய் பிடித்து விட்டதுபோலிருக்கிறது. ஆயிரம் ஆண்டு கழித்துத்தான் அத்தகைய நெருக்கடி கால நிலைமை வரும் என்று கூறினேன்! இன்னும் ஆயிரம் ஆண்டு முடியவில்லை.

நிருபர்: நெருக்கடிக் கால தொத்து நோய் அல்ல நெருக்கடி காலத்தில் சிறைப்பட்ட நிருபர்களில் நானும் ஒருவன்.

இந்திரா: என்னுடைய பேச்சுக்களையும் நடவடிக்கைகளையும் வெளியிடும் நிருபர்கள், ஜனதா அரசாங்கத்தில் வேலை இழந்து விடுவார்கள்.

நிருபர்: அம்மாதிரியான அச்சத்திலிருக்கும் ஒரு நிருபரை யாவது உங்களால் காட்ட இயலுமா?

இந்திரா: (மௌனம்-சற்று நேரம் கழித்து) ஸ்ரீ காந்த் வர்மா என்ற நிருபரை பத்திரிகையிலிருந்து விலக்கி விட்டார்களே?

நிருபர்: யாரும் விலக்கவில்லை, அவராகவே விலகிக் கொண்டார்.

இந்திரா: பெரிய முதலாளிகளின் கரங்களில் பத்திரிகை உலகம் கட்டுண்டு கிடக்கிறது...

நிருபர்: முதலாளிகளின் பலம் வளர்ந்தது, உங்கள் ஆட்சிக் காலத்தில்தான். போகட்டும்...இப்போதாவது பத்திரிகை உலகில் முதலாளிகளின் ஆதிக்கம் இருக்கக் கூடாது என்று கூறுவீர்களா?

இந்திரா: (மௌனம்)

நிருபர்: நீங்கள் மீண்டும்பதவிக்கு வந்தால் பத்திரிகை உலகை முதலாளிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பதாக உறுதி அளிப்பீர்களா?

இந்திரா: அதெப்படிக் கூற யும்...?

நிருபர்: சட்ட சபைத் தேர்தல் முடிவுகள் எதைக் காட்டுகின்றன.

இந்திரா: நான்தான் உண்மையான எதிர்க்கட்சித் தலைவர்! நாடாளுமன்றத்தில் இல்லாவிட்டாலும், நான்தான் உண்மையான எதிர்க்கட்சித் தலைவர். நாடாளுமன்றத்தில் இருப்பதைவிட, வெளியில்தான் மக்கள் அதிகமாகஇருக்கிருர்கள்.

நிருபர்: நாடாளுமன்றத்தைவிட வெளியில் இருக்கும் மக்களுக்குத்தான் மதிப்பு என்றால், அவசரகால நிலைமையைக் கொண்டு வந்த பொழுது. நாடாளுமன்றத்தைமட்டும்நம்பியிராமல் நீங்கள் வெளியில் இருந்த மக்களின் ஒப்புதலைப் பெற்றிருக்கலாமே!

இந்திரா: (மழுப்பப் பார்க்கிருர்) ...... வந்து......ஆனல் எல்லோருக்கும் தெரியும்......

நிருபர்: நீங்கள் வெற்றிபெற்ற இரண்டு மாநிலங்களில்கூட, 1977 தேர்தலில் இருந்ததைவிட, இப்பொழுது ஜனதா கட்சிக்கு ஆதரவு வளர்ந்திருக்கிறதே...அப்படியிருக்கும் போது, இதில் அதிகமாகக் கொண்டாட என்ன அடிப்படை இருக்கிறது?

இந்திரா: (மௌனம்)

[வெற்றிக் களிப்பிலிருந்த இந்திராவின் முகத்தில் படிந்த மகிழ்ச்சியின் ரேகைகள் நிருபர்களின் கேள்விக்கணைகளால் முற்றிலும் மங்கிவிட்டதாக, இந்திராவுக்குத் 'துதிபாடும்' ஒரு இதழே ஒப்புக்கொண்டது.)

அப்பாவி அய்யாசாமி!

தவறு செய்ற போலீஸ் அதிகாரிங்க மேல கண்டிப்பா நடவடிக்கை எடுப்பேன்னு சட்டசபைல நம்ப முதலமைச்சர் அடிச்சுப் பேசியிருக்காரு.

ஆனு, பரமகுரு, கிருஷ்ணசாமி, வித்யாசாகர் போன்ற போலீஸ் அதிகாரிங்க தவறு செஞ்சவங்களேன்னு இஸ்மாயில் கமிஷன் அறிக்கை விட்டு ஆறு மாசமாகியும் அந்த அதிகாரிங்க 'ஜம்'முன்னு வேலை பார்த்துகிட்டு மாசா மாசம் சமபளம் வாங்கிகிட்டுதான இன்னும் இருக்காங்க.

நம்ப முதலமைச்சர் 'கண்டிப்பா நடவடிக்கை எடுக்கற' லட்சணம் இதுதானு?

சிறையில் சித்திரவதைகள் நடந்தது உண்மையே!

ஒவ்வொரு அரசியல் கைதியும், சிறைச்சாலைக்குள் அனுமதிக்கப்பட்டதும், வாய்ப்புக் கிட்டியவுடன் அவர்களைச் சிறை அதிகாரிகள் கடுமையாகவும் ஈவு இரக்கமின்றியும் அடிப்பதை வழக்கமான ஒரு கொள்கையாக வைத்திருந்தனர் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்!

கைதிகள் அடிக்கப்பட்டபோது ஜெயிலர் கையூம், சூப்பிரெண்ட் வித்யாசாகர் ஆகியோர் உடனிருந்தனர்!

நகரில் உள்ள மத்திய சிறையில் வசதிகள் மிக மோசமாக உள்ளன.

வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கும், பூனைகளுக்கும் கிடைக்கும் வசதிகள்கூட சிறையில் உள்ள கைதிகளுக்குக் கிடைக்கவில்லை!

சிறைக் கொடுமைகள் பற்றி விசாரித்த அப்போதைய சிறைச்சாலை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பரமகுருவின் அறிக்கை உண்மையல்ல; கைதிகள் அடிக்கப்படவில்லை என்பதனை அவரது அறிக்கை உறுதி செய்யவில்லை!

ஒரு இலாகா தலைவரிடம் எதிர்பார்க்கப்பட்ட பொறுப்புணர்ச்சி அவரிடம் (பரமகுருவிடம்) இல்லை.

[நீதிபதி திரு. எம். எம். இஸ்மாயில் தலைமையிலான விசாரணைக் குழுவின் தீர்ப்பிலிருந்து]

★ நீதிபதியால் 'பொறுப்புணர்ச்சி அற்றவர்' எனச் சொல்லப்பட்ட அதே பரமகுருதான் இப்போது சென்னை நகரப் போலீஸ் கமிஷனராகப் பணியாற்றுகிருர்!

அரிய வாய்ப்பு, குறுகிய சந்தர்ப்பம்!

எங்களது தவணைமுறை
திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்!

எம். கே. டிரேடர்ஸ்,

41, ரங்கராஜபுரம் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-24.

—: கிளை :—

50, ஏரிக்கரைத் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33.

எங்களிடம் ரேடியோ, டிரான்சிஸ்டர், ஸ்டீல்பீரோ, சைக்கிள் சோபா, மின்விசிறி மற்றும் வீட்டுக்கு தேவையான எல்லா பொருட்களும் ரொக்கத்திற்கும் தவணை முறையிலும் கிடைக்கும்.

உரிமையாளர் :— O. Y. A. முகமது மைதீன்.

இன்னும் அகலவில்லை தீண்டாமை இருள்

"வல்லரசுகளின் காலனி ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் நாடுகளில் ஒரு கறுப்பு அடிமையாகப் பிறப்பது — அல்லது, இந்தியாவில் ஒரு தீண்டத்தகாதவனாகப் பிறப்பது—ஆகிய துயரமிகு இவ்விரு 'தலைவிதி'களில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டி வந்தால் — நிச்சயமாக நான் முதலாவதையே தேர்ந்தெடுப்பேன்"—டுபாஸ்.

இந்தியா முழுக்கச் சுற்றி அலைந்து, இருக்கின்ற எண்ணற்ற மதங்கள் குறித்தும், ஏற்ற தாழ்வுகள் பற்றியும் விரிவாக ஒரு நூல் எழுதியுள்ளார் டுபாஸ். அந்நூலின் பெயர், 'இந்து—பழக்க வழக்கங்கள் நடைமுறைகள், சடங்குகள் (Hindu Manners, Customs and Ceremonies). அந்த நூலில்தான் மேற்சொன்னவாறு எழுதியுள்ளார் டுபாஸ்.

இந்தியா விடுதலை பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே அந்த நூல் எழுதப்பட்டது என்றாலும், இப்போதும்கூட இருக்கின்ற 'தலைவிதி'களிலேயே மிக மோசமான, துயரமிக்க 'தலைவிதி', இந்தியாவில் ஒரு பிற்படுத்தப்பட்டவனாக மகாத்மா காந்தியின் மொழியில் சொல்வதானால் 'கடவுளின் குழந்தையாக, (ஹரிஜனாகப்) பிறப்பதுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

பிற்படுத்தப்பட்டோர் என அழைத்துப் பிற 'உயர்' சாதிக்காரர்களால் வஞ்சிக்கப்பட்ட—வஞ்சிக்கப்பட்டு வரும்—சகோதர, சகோதரிகளின் கதைகள் இன்றளவும் கண்ணீரால் எழுதப்பட வேண்டியவைகளே. இன்றைய இந்தியாவில் கூட அவர்கள் தொடர்ந்து துன்புறுத்தல்களுக்கும், சமுதாயப் புறக்கணிப்புகளுக்கும் பலியாகி வருகின்றனர்.

இந்தியா விடுதலை பெற்று முப்பதாண்டுகளுக்கு மேல் உருண்டோடிய பிறகும் அந்த ஏழை மக்களின் — அன்றாடம் உழைத்துப் பிழைக்கும்—வாழ்வின் அடிமட்டத்திலிருக்கும் அவர்களின் இழிநிலை மாறவில்லை—என்பதை நினைக்கும்போது — காலனி ஆதிக்கத்திற்கு எதிராகவும், கறுப்புநிற மக்கள் நடத்தப்படும் ஒரு தலைப் போக்கான முறைகளைக் கண்டித்தும் கண்டனக் குரல்களை உரக்க எழுப்ப இந்தியர்களாகிய நமக்கு ஏதாவது 'தார்மீக' உரிமை இருக்கிறதா எனக் கேட்கத் தோன்றுகிறது.

இன்றைய நாகரிக உலகம் 'இதயமாற்று'ப் பரிசோதனை முதற்கொண்டு, கற்பனைக் கெட்டா தூரத்திலிருப்பதாகக் கூறப்படும், வானத்தில் சுழலும் கோளப்பரப்புகளில் காலூன்றி வாழ இயலுமா என இடைவிடாது முயற்சி செய்வது போன்ற எத்தனையோ வியப்பூட்டும் சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிறது. ஆனால், இந்தியாவில் மட்டும் இன்னும் தீண்டாமை அந்தப் பழைய குரூர வடிவத்தோடு உலாவிக் கொண்டுதான் இருக்கிறது.

இந்தியாவின் பெரும்பான்மையான கிராமங்களில் இன்றுகூடத் தாழ்த்தப்பட்டோருக்காக ஆலயக் கதவுகள் திறக்கப்படுவதில்லை. பொதுக் கிணறுகளில் தாகம் தீர்க்க அவர்கள் நீர் எடுக்க இயலாது; பிற 'சாதிக்காரர்'களுடன் சேர்ந்து உணவுவிடுதிகளில் அமர்ந்து அவர்கள் சாப்பிடக்கூடாது. அவர்களுக்குத் தேநீர் தருவதென்றால், கடைக்காரன் 'கொட்டாங்கச்சியிலோ அல்லது வெளியே தனியாகக் கயிற்றில் கட்டித் தொங்க விட்டிருக்கும் தகர குவளையிலோதான் ஊற்றுவான். 'உயர் சாதிக்காரர்கள்' நிலங்களுக்கருகே இருக்கும் பொது வழிகளில் அவர்கள் நடக்கக் கூடாது!

நிலமற்ற 'கீழ்ச் சாதி' உழவனுக்கு ஒத்துக்கொள்ளப்பட்ட குறைந்தபட்சக் கூலி கூடத் தரப்படுவதில்லை; சிறிய 'கையளவு' நிலத்திற்குச் சொந்தக்காரனாக இருக்கும் தாழ்த்தப்பட்ட உழவன், உழவுத் தொழிலை சற்று மேம்படுத்தக் கூட்டுறவு நிறுவனங்களை அணுகிக் கடன் கேட்டால், 'வெளியே தள்ளிக் கதவைச் சாத்துவதுதான்' கிடைக்கும் பதிலாக இருக்கிறது.

ஆகவே, அவர்கள் லேவாதேவிக்காரர்களின் காலடிகளில் போய் விழுகிறார்கள்; ஈவிரக்கமற்ற, பணத்தாசை பிடித்த லேவாதேவிக்காரர்களோ இரண்டாயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டு நாலாயிரம் ரூபாய்க்குக் கடன் பத்திரத்தில் கைநாட்டு வாங்கிக் கொள்கிறார்கள்; இறுதியில் வாங்கிய கடனுக்கு வட்டி கூடக் கட்ட முடியாமல் இருக்கின்ற நிலத்தையும் இழந்து விடுகிறார்கள் அந்த ஏழை மக்கள்!

கிராமங்களில் மட்டும்தான் இந்த அவலநிலை என்று சொல்வதற்கில்லை; கல்வி நிறுவனங்களும், தொழிற்கூடங்களும், உயர்ந்து நிற்கும் நகரங்களில்கூட தீண்டாமையைப் பொறுத்தவரை, கடந்துபோன நூற்றாண்டின் அழுகிய காற்றையே சுவாசித்துக் கொண்டிருக்கின்றன; அரசுத்துறை, தனியார் துறை, கல்விச்சாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், மருத்துவ விடுதிகள் — போன்றவற்றில் பணியாற்றும் பிற்படுத்தப்பட்டோரை அணுகி அவர்கள் பிறரால் நடத்தப்படும் முறையைப் பற்றிக் கேட்டபோது, "பிற சாதிக்காரர்கள் எங்களை வெறுக்கிறார்கள். அவர்களுக்குச் சமதையாக அமர்ந்து நாங்கள் பணியாற்றுவதை அவர்கள் விரும்பவில்லை. வேறு வழியின்றி—பல்லைக் கடித்துக் கொண்டு—அவர்கள் சகித்துக் கொண்டிருக்கிறார்கள்" போன்ற பதில்கள்தான் அவர்களிடமிருந்து வேதனைப் பெருமூச்சுக்களோடு வெளிவருகின்றன.

'உயர் சாதிக்காரர்கள்' தீண்டத்தகாதோர் எனப்படுவோரைத் தொடர்ந்து சமுதாயப் புறக்கணிப்புகளுக்கும், அநீதிகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் எப்படியெல்லாம் ஆளாக்கி வருகிறார்கள் என்பதற்கு இதோ சில எடுத்துக் காட்டுகள்:—

இமாச்சல மாநிலத்திலிருக்கும் மண்டி என்ற ஊரில் தாழ்த்தப்பட்ட சகோதரி ஒருவர் தையல் ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார் — அரசு நடத்தும் 'இண்டஸ்டிரியல் டிபார்மெண்ட்'டில். அரசு, அவரை மலைப்பகுதியிலிருக்கும் ஒரு கிராமத்திற்கு வேலை மாற்றம் செய்தது.

அந்தக் கிராமத்திலிருக்கும் 'உயர் சாதிக்காரர்கள்' யாரும் ஆசிரியை தங்குவதற்காக வாடகைக்கு வீடுவிட முன் வரவில்லை; அதுமட்டுமல்ல, வீடுதர வந்தவர்களையும் 'அதட்டி மிரட்டி'த் தடுத்துவிட்டார்கள்.

தனக்கேற்பட்ட இக்கட்டான சூழ்நிலையை விவரித்து

சித்தார்த்தன்

ஆசிரியை அரசுக்குக் கடிதம் எழுதினார். கடிதத்தின் முடிவில் அவர் கூறியதாவது:—

"......திருமணமான நான் ஒரு குழந்தைக்குத் தாய். இப்போது பணியாற்றும் இடத்தில் தங்குவதற்கு வீடு கிடைக்காமல் தவியாய்த் தவிக்கிறேன்; நான் தங்குவதற்கு அருள்கூர்ந்து ஏதாவது ஆவன செய்யவும்; அல்லது வேறு இடத்துக்கு மாற்றவும்; இல்லையெனில்பணியிலிருந்து நான் விலகுவதைத் தவிர வேறுவழியில்லை..."

அரசு, அவர் தங்குவதற்கான ஒரு வீடு ஏற்பாடு செய்யவுமில்லை; வேறு இடத்திற்கு மாற்றவுமில்லை; அவருடைய 'பணி விலகலை' மட்டும் ஏற்றுக் கொண்டது.

ஃ ஃ ஃ

உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த மதுரா மாவட்டத்திலிருக்கும் கிராமம் ஒன்றில் வாழும் ஏழை தாழ்த்தப்பட்ட சகோதரர் இருவர் லேவாதேவிக்காரரின் வீட்டுக் கதவைத் தட்டினார்கள்; அத்தியாவசியமான குடும்பக் காரியம் ஒன்றிற்காகக் கடன் வாங்க!

அவர் நாலாயிரம் ரூபாய்க்குக் கடன் பத்திரத்தில் சகோதரர்களின் கைநாட்டுகளை வாங்கிக் கொண்டார். ஆனால் கொடுத்ததோ மூவாயிரம்! வட்டியோ—அநியாய வட்டி!

சகோதரர்களால் வட்டியைக்கூடக் குறித்த காலத்தில் செலுத்த முடியவில்லை; லேவாதேவிக்காரர் நீதிமன்றத்தில் வழக்காடி, சகோதரர்களின் இருக்கின்ற சிறிது நிலத்தையும் 'பறித்துக் கொள்ள' அனுமதி வாங்கிவிட்டார். இதற்கிடையில் தாழ்த்தப்பட்டோர் நலன்களுக்காக அமர்த்தப்பட்ட அதிகாரிகளில் ஒருவர், லேவாதேவிக்காரரை அணுகி, சகோதரர்களிடம் சற்றுக் கருணை காட்டும்படி வேண்டிக் கொண்டார். லேவாதேவிக்காரர் அதிகாரி சொன்னதைக் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை.

அதிகாரி, மாவட்ட ஆட்சியாளரை அணுகி, ஏழைச் சகோதரர்களுக்கு ஏற்பட்ட கதியை எடுத்துரைத்து, அவர்களுக்கு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக் கொண்டார்.

மாவட்ட ஆட்சியாளர் சொன்ன பதில்:—

"விவகாரம் நீதி மன்றத்திற்குப் போய்விட்டது; இதில் நான் செய்வதற்கு ஒன்றுமில்லை எனவே உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு நீங்கள் போங்கள்......" என்பதே.

ஃ ஃ ஃ

டில்லியில் 'DESU' (டில்லி எலக்ட்ரிக் சப்ளை அண்டர்டேக்கிங்) நடத்தும் பள்ளி நிர்வாகம் அறுபத்தாறு ஆசிரியைகளுக்குப் 'பணி உயர்வு' அளித்தது; ஆனால், அவர்களில் ஒருவர்கூடத் தாழ்த்தப்பட்டவர் கிடையாது! பன்னிரண்டு ஆண்டு காலமாகப் பணியாற்றிய ஒரு தாழ்த்தப்பட்ட ஆசிரியை 'பணி உயர்வுக்காக' அனுப்பிய பல விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன; தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள 'பணி உயர்வுகளை' ஒதுக்க வேண்டும் என்ற சட்டம் இருந்தும், அந்தச் சகோதரிக்குப் 'பணி உயர்வு' கிட்டவேயில்லை!

ஃ ஃ ஃ

1971ஆம் ஆண்டு கருநாடக மாநில அரசு 'தீண்டாமை ஒழிப்பிற்காக'ச் சில கிராமங்களுக்குப் பரிசுகள் அளித்தது; பரிசு பெற்ற அந்தக் கிராமங்களின் பஞ்சாயத்துக்கள், தாழ்த்தப்பட்டோரைப் புறக்கணிக்கும் 'சமுதாய நடவடிக்கைகளை' ஏகமனதாக நிறைவேற்றி வந்தனவாம்......!

ஃ ஃ ஃ

இராஜஸ்தானிலுள்ள ஜய்ப்பூரில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி குடியேற வந்தார்; 'உயர் சாதிக்காரர்கள்' ஓர் அணியாக நின்று அவர் தங்குவதற்கு வீடு தர மறுத்துவிட்டார்கள். இறுதியில் அவர் 'நகர சுத்தித் தொழிலாளர்கள்' வாழும் மோசமான பகுதியிலேயே குடியேறினர்.

ஃ ஃ ஃ

'பாரஹியா' என்ற கிராமத்தில் நடந்த கலவரத்தின் போது ஏழு தாழ்த்தப்பட்டோர், 'உயர் சாதி' நிலப்பிரபுக்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என அரசு குறிப்புகூறியது; 'சாம்பரான்' கிராமத்தில் பதினறு தாழ்த்தப்பட்டோர் 'உயர் சாதிக்காரர்களால்' கொல்லப்பட்டார்கள்.

ஃ ஃ ஃ

ஒரேஒரு 'உயர் சாதி நிலப்

(10-ஆம் பக்கம் பார்க்க)

ஏற்றுமதியில் இந்தியாவின் சாதனை!

எலும்புக் கூடுகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. உலகிலேயே இந்தியாதான் பிற நாடுகளுக்கு அதிகமான எலும்புக் கூடுகளை ஏற்றுமதி செய்கிறது. 1976—1977 ஆண்டுகளில் எலும்புக் கூடு ஏற்றுமதிக்கு இந்தியா தடைவிதித்தபோது உலகெங்கிலும் 'பற்றுக்குறை' ஏற்பட்டது. பிறகு, அத்தடையை இந்தியா நீக்கியபோது சந்தையில் எலும்புக் கூடுகளின் விலை இன்னும் ஏறியது; பிற நாடுகள் அவைகளை வாங்கப் போட்டி போட்டன.

•

இந்தியாவிலிருந்து அதிக எலும்புக் கூடுகள் ஏற்றுமதி ஆவதற்கான காரணம் என்னவோ!

திரையுலகில் ‘திகில்’ படங்கள்

-: ஏ. எஸ். மூர்த்தி :-

தணிக்கையாளர்கள் தங்களது கத்திரிக் கோல்களைத் திறம்படக் கையாண்ட பின்னரும், ‘எக்ஸார்ஸிஸ்ட்’, ‘ஓமன்’ ஆகிய படங்கள் ‘ஓகோ’ என்று ஓடிக்கொண்டிருக்கின்றன. அப்படங்களில் சில காட்சிகள் நம் மனத்தில் ஒருவித இனந்தெரியாத அச்சத்தைத் தோற்றுவிக்கின்றன. ‘திகில் படங்கள்’தான் தற்போது அமெரிக்கத் தயாரிப்பாளர்களது உற்பத்திச் சரக்காக உள்ளன. ‘‘தங்களைச் சூழ்ந்துள்ள கஷ்டங்களை மறக்க அப்படங்கள் மக்களுக்கு உதவுகின்றன’’ என்கின்றனர் அத்தயாரிப்பாளர்கள்.

1960ஆம் ஆண்டுவாக்கில் ஜேம்ஸ்பாண்ட் படங்கள் உலகைப் பவனி வந்தன. அவற்றுக்கான மவுசு குறையத் தொடங்கியவுடன், பழைய சரக்குகளை கொஞ்சம் அதிகப்படியான ‘செக்ஸ்’, ‘சஸ்பென்ஸ்’, ‘குரூரம்’ ஆகியவை கலந்து, புதிய வடிவங்களில் வெளி வரலாயின.

அரை நிர்வாண, முழு நிர்வாணப் படங்களும், மக்களிடையே விரைவில் எடுபடாமற் போனதால், இப்போது குரூரமும், பயங்கரக் காட்சிகளும் திரைகளில் தத்ரூபமாகக் காட்டப்படுகின்றன. ஒரு கம்பியினால் குத்திக்கொண்டு, ஒரு பெண் தனக்குத் தானே கருச் சிதைவு செய்துகொள்ளும் காட்சி (தி அதர் சைட் ஆப் தி மிட்நைட்), அப்பட்டமான கோரக் கொலைகள் (டாக்சி டிரைவர்), ஒரு சுறுமீன் மனிதனது அங்கங்களைத் துண்டுகளாக்கி விழுங்குதல் (ஜாஸ்), அழகான குழந்தையின் முகம், கோரமாக மாறி அதன் வாயிலிருந்து அருவருப்பூட்டும் திரவம் பீறிட்டடிப்பது (எக்ஸார்ஸிஸ்ட்) போன்றவை இதற்கு உதாரணங்கள், பயங்கரக் காட்சிகளுக்கென்று, அதிகப் பொருட்செலவில் செயற்கையாக உருவங்களும் உண்டாக்கப்படுகின்றன. அதற்கு உதாரணம், ‘ஜாஸ்’ படத்திற்கெனத்தயாரிக்கப்பட்டசெயற்கைசுறுமீன், ‘கிங்காங்’ படத்திற்கென தோற்றுவிக்கப்பட்ட இராட்சசக் குரங்கு, இன்னபிற.....

பயங்கரம், வன்முறை, குரூரம் ஆகியவற்றைக் காட்சிகளாகப் படைப்பதனால் கிடைப்பது என்ன? படத் தயாரிப்பாளர்களுக்கு நல்ல லாபம் கிடைப்பது உறுதி. ஆனால், அவை மனித உள்ளங்களில் எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன? எதார்த்தஉலகில் காணப்படும் முரண்பாடுகளையும், இன்பதுன்பங்களையும் மறந்து, ஜேம்ஸ்பாண்ட்டின் கற்பனை உலகில் திரிவதற்கோ அல்லது பூத பைசாசங்கள் நிறைந்த உலகில் மனிதன் தனது கையாலாகாத்தனத்தை எண்ணி வெம்புவதற்கோ அவனுக்கு அப்படங்கள் உதவுகின்றன.

இத்தகைய படங்களின்பால் ஈடுபாடு வளர வளர, படம் பார்ப்போர், மேன்மேலும் அதிகக் குரூரத்தைக் காணத் தயாராகிவிடுகிறார்கள். அதை முன்னிட்டு, தயாரிப்பாளர்களும், தங்களது உத்திகளை மேன்மேலும் வளமையாக்குகின்றனர். இது ஒரு நச்சுச் சுழல் வட்டம். அழகியனவற்றையும், உன்னதமானவற்றையும், கண்டு ரசிக்க வேண்டிய கண்கள், வெறிச்செயல்களையும், குரூரத்தையும் அவலட்சணங்களையும் கண்டு உணர்வு பெறத் தொடங்குகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் திரைப்பட இயக்குநர் ரோமன் பொலான்ஸ்கியின் (தற்போது அவர் ஹாலிவுட்டில் பல திகில் படங்கள் எடுத்துக் கொண்டிருப்பவர், 13 வயதுச் சிறுமியைக் கற்பழித்து, அண்மையில் பத்திரிகைகளில் இடம் பெற்றவர்) வீட்டில், அவரது கர்ப்பிணி மனைவியான நடிகை ஷரானும், அங்கிருந்த அத்தனை விருந்தினர்களும் குரூரமாகக் கொலை செய்யப்பட்டனர்- திடுக்கிட வைத்த அந்தக் கொலைகளுக்கான மூலகாரணத்தை, உளவியல் நிபுணர்களும், சமூக இயலாளர்களும், போலீஸ்காரர்களுடன் சேர்ந்து ஓராண்டிற்கும் மேலாகத் தேடினர்.

குற்றவாளிகள் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டனர். வன்முறை, குரூரம், பாலின வெறியாட்டம் ஆகிய சூழ்நிலையில் வாழ்ந்த, விரக்தியடைந்த ஓர் இளைஞர் கூட்டம்தான் அக்கொலைகளைச் செய்ததாகத் தெரியவந்தது. அறிவுக்குப் புறம்பானது அனைத்தையும் கண்டும் காணாததுபோல இருந்து கொண்டு, பைத்தியக்காரத்தனங்களையும், பச்சை இரத்தக் கொலைகளையும் காட்சியலங்காரங்களாகக் கண்டுவரும் அறிவுத்துறையினரது பொறுப்பற்ற தன்மையே குற்றங்களை மேலும் தூண்டுகிறது. மனித உங்களின் ஆபாச, அவலட்சணங்கள், நாகரிகத் தன்மைபடைத்தவையாக ஆக்கப்படுகின்றன.

இரத்தத்தை உறையவைத்து, நமது மனத்தில் மிகுந்ததிகிலை ஊட்டுவதற்காக எடுக்கப்படும் அந்த திகில் படங்களில் பல, நமது மனதில் ஒருவித அருவருப்பையே ஊட்டுகின்றன. உதாரணமாக, ‘ஐ கிளாடியஸ்’ என்ற ஒரு பிரிட்டிஷ் டெலிவிஷன் படத்தில் ஒரு காட்சியை அமெரிக்க ‘நியூஸ்வீக்’ பத்திரிகை வர்ணித்துள்ளது. காலிகுலா என்ற மன்னன், தனது கர்ப்பிணி சகோதரியின் வயிற்றைக் குத்திக் கிழித்து, கருப்பையிலுள்ள கருவை எடுத்து, ஆவலுடன் மென்று தின்கிறானும். இக்காட்சியைக் கண்ட பிரிட்டிஷ் டெலிவிஷன் ரசிகர்களும் எந்தவிதமான எதிர்ப்பையும் காட்டவில்லையாம்; இதனை அசிங்கம், அவலட்சணம், ஆபாசம் என்பதைத் தவிர வேறு எப்படிக் கூறுவது?

இத்தகைய காட்சிகள் வாழ்வின் மாயத்தையும், மனிதனின் செயலற்ற தனமையையும் குறித்த ஒரு பிரமையைத் தோற்றுவிக்கின்றன. எழிலையும், அழகையும் கண்டு ஏற்படும் உள்ளக் கிளர்ச்சிக்குப் பதில், மனத்தில் வெறுப்பையும், அச்சத்தையும் தோற்றுவிக்கின்றன.

இன்னும் அகலவில்லை தீண்டாமை இருள்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரபு யாராலோ கொல்லப்பட்டதற்காக, பழிவாங்கும் நடவடிக்கையாக, ‘உயர்சாதி’ நிலப் பிரபுக்கள் ஒன்றுகூடி எட்டு தாழ்த்தப்பட்டோரை ‘காக்காய், குருவிகளைச் சுடுவதுபோல்—சுட்டுக் கொன்றார்கள்; இறந்தவர்களில் ஒருவர் எண்பது வயது மூதாட்டி! சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காக்க வந்து ஆயுதம் தாங்கிய காவலர்கள் வேடிக்கை பார்க்க, அவர்கள் கண் முன்னாலேயே இந்த அக்கிரமம் பீஹாரிலிருக்கும் கிராமம் ஒன்றில் நடந்தது!

ஃ ஃ ஃ

இன்னும் சில கிராமங்களில் பல தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்—ஒரு நாயைக் கல்லால் அடித்துக் கொல்வதற்கு முன் அதற்கு வெறி பிடித்திருக்கிறது என்று கூறுவது போல்—இளைஞர்கள் ‘பயங்கர நக்சலைட்டுகள்’ என வர்ணிக்கப்பட்டு பிறகு கொல்லப்பட்டார்கள்!

இளைஞர்களிடமிருந்து எந்த ஒரு உயிர்போக்கும் கருவியையும் காவல்துறையினர் கைப்பற்றவில்லை. கைப்பற்றியதெல்லாம், ‘மா-சே-துங்கின் சிந்தனைகள்’ என்ற உலகப் புகழ்பெற்ற கருத்துக் கருவூலத்திலிருந்து சில பக்கங்களே!

அண்மையில் பீகாரில் ‘பெல்சி’யிலும், ‘பதட்டா’விலும் தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக ‘உயர் சாதிக்காரர்கள் கட்டவிழ்த்து விட்ட வன்முறைகள், முப்பதாண்டுகளுக்குப் பிறகும் ‘தீண்டாமை ஒழிப்பு’ எவ்வாறு இந்தியாவில் தேங்கிக் கிடக்கிறது என்பதற்கு ஒரு பலமான எடுத்துக்காட்டு!

இந்திய மாநிலங்களிலுள்ள அரசுகள் ‘தீண்டாமை ஒழிப்பிற்காக’ இடைவிடாது போரிட்டு வருகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. சில ‘சாதி இந்து’ ஆளுங்கட்சி உறுப்பினர்களும், காவல் துறை அதிகாரிகளும், பிற அதிகாரிகளும் மனப்பூர்வமாக ஒத்துழைத்தால் ‘தீண்டாமைக் கொடுமைகளை’ ஓரளவு கட்டுப்படுத்த இயலும்.

இந்திய மாநிலங்களிலேயே தீண்டாமைச் சுவர் கெட்டித்துப் போய் சற்றுக்கூடக் கீறல் விழாது உறுதியாக நிற்பது மத்தியப் பிரதேசத்தில்தான்!

அங்கே பிற்படுத்தப்பட்டோர் தேர்தல் காலங்களில் மட்டும ‘உயர் சாதிக்காரர்’களாலும் அரசியல் கட்சிகளாலும் ‘அன்போடு’ அரவணைக்கப்படுகிறார்கள்!

தேர்தல்கள் முடிந்த பிறகு வழக்கம்போலவே நிராகரிக்கப்படுகிறார்கள்; ஒதுக்கப்படுகிறார்கள்!

காங்கிரசு இயக்கம்—மத்தியப் பிரதேசத்தில் ஆட்சி செலுத்தியபோது தாழ்த்தப்பட்டவகுப்பிலிருந்துவந்தஒரு வர்கூட கட்சித் தலைவராகவோ, முதலமைச்சராகவோ இருந்ததே கிடையாது. இன்று ஜனதாக் கட்சியிலும் இதே கதைதான்!

தமிழகத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட நாட்களைத் தாழ்த்தப்பட்டோரின் ‘பொற்காலம்’ எனக் கூறலாம். பிற மாநிலங்கள் கண்டு வியப்படையும அளவுக்கு—அவைகளுக்கு வழிகாட்டியாக—பிற்படுத்தப்பட்டோர் தி. மு. கழகத்தின் ஆட்சியின்போது தலைநிமிர்ந்தும், மனமகிழ்ந்தும் வாழ்ந்தார்கள் என்பதை மாற்றுக் கட்சியினரும் மறுப்பதற்கில்லை.

அரசுப் பணிகளில் அவர்களுக்கு முதலிடம் வழங்கிய து மட்டுமல்ல—குடியிருப்பு வீடுகளும், உழவுக்கு நிலங்களும் தந்தது மட்டுமல்ல — ‘உயர் சாதிக்காரர்’களின் ‘பிறப்புரிமை’யாக இருந்த அர்ச்சகர் பதவியைக்கூட ‘பிற்படுத்தப்பட்டவருக்கு அளிக்க முன் வந்தது — இந்திய வரலாற்றிலேயே தி. மு. கழகம் ஒன்று தான்! இன்றோ—

தாழ்த்தப்பட்டோருக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்கும் திட்டத்தைப் புறக்கணித்துவிட்டு ‘தகுதி’யின் அடிப்படையிலேயே எதையும் செய்யப் போகிறார்களாம் ஆளுங்கட்சியினரான அ. தி. மு. க.-வினர்!

‘உயர் சாதி’ என்ற முத்திரையும், பணபலமும் இருந்துவிட்டால் இல்லாத தகுதிகள் எல்லாம் வீடு தேடி ஓடிவரும் என்பது மக்களுக்குத் தெரியாதா என்ன?

தீண்டாமை இருளை முற்றிலும் அகற்ற ஒருபுறம் இடைவிடாத போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே — மறுபுறம் மெல்ல மெல்ல உருக்குலைந்து, உயிரிழந்து வரும் ‘வர்ணாசிரம’ தர்மங்களுக்குப் புத்துயிர் அளிக்க இன்னொரு சாராரின் போராட்டமும் நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்!

‘சாதிப் பிரிவுகளைத் தகர்த்தெறிந்து, மனு சாஸ்திரத்திற்கு விரோதமாகச் செயல்படுவது மகாபாவம்’ எனப் பகிரங்கமாகக் கூக்குரலிடும் சங்கராச்சாரியார்களுக்கு எதிராகச் சமுதாய ரீதியாகவும்—‘உயர் சாதியின் புனித அமைப்பை உடையாமல் பாதுகாக்க வேண்டும்’ என அழுது புலம்பிப் போதனை செய்யும் ‘ஜய ஜய சங்கரா’ நாவல்களுக்கு எதிராக இலக்கிய ரீதியாகவும் தொடர்ந்து நாம் போரிட்டே ஆகவேண்டும்!

அபாயம் - தொடாதே!

மின்சக்தி செலுத்தும் நிலையத்தில் மின் கம்பத்தில் இரண்டு எலும்புகளை X எனும் ஆங்கில எழுத்துப்போல அல்லது பெருக்கல் குறிபோல வரைந்து அதன் மேல் பகுதியில் மண்டை ஓடு ஒன்றினை வரைந்து 'அபாயம், தொடாதே' என்று எச்சரிக்கை செய்திருப்பார்கள்.

வெடி மருந்துக் கிடங்கில் 'அபாயம் நெருப்புடன் நெருங்காதீர்கள்' என்று எச்சரிக்கைப் பலகையினைத் தொங்க விட்டிருப்பார்கள்.

இந்திய அரசியல் சட்டத்தைத் தொகுத்த அறிஞர்கள் அச்சட்டப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் 'ஆட்சி மொழி—அபாயம் தொடாதே' என்ற எச்சரிக்கையைப் பொறித்திருக்க வேண்டும். என்ன காரணத்தாலோ அப்படிச் செய்யத் தவறிவிட்டார்கள்.

அவர்கள் தவறினாலும் நாட்டிலுள்ள நடுநிலை பிறழா நல்லறிஞர்கள் அப்போதைக்கப்போது எச்சரித்து வந்திருக்கிறார்கள். பொதுமக்களும் போராட்டங்களின் மூலம் அப்படிப்பட்ட எச்சரிக்கையை ஆட்சியாளர்க்கு விடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அப்படிப்பட்ட எச்சரிக்கைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியவர்கள், எடுத்துக் கொள்ளத் தவறுவதுதான் இந்நாட்டின் துரதிர்ஷ்டம்.

"ஆங்கிலத்தைத் திணிக்காதீர்கள்" அண்மையில் இந்த முழக்கம் நாட்டில் எதிரொலித்தது. இறந்துபோன இந்தி வெறியர் சேட் கோவிந்ததாசின் கருத்து இது. அவருடைய குரல் இது. ஒருவேளை இறந்தவர் மீண்டும் பிறந்து வந்து பேசுகிறாரோ என்னும் சந்தேகம் ஏற்பட்டால் அது நியாயமான சந்தேகமே. ஆனால், சேத் கோவிந்ததாசு மறுபிறவி எடுக்கவில்லை. பாரதப் பிரதமர் மொரார்ஜிதான் கோவிந்ததாசின் கருத்தை அதே தொனியில் கூறியுள்ளார். அதுவும் நாடாளுமன்றத்தில்!

நாடாளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவர் வினா எழுப்ப அதற்கு அமைச்சர் அத்வானி ஆங்கிலத்தில் விடை கூற முயல, கேள்வி இந்தியில் இருப்பதால் இந்தியில்தான் அமைச்சர் பதில் கூற வேண்டுமென்று நிர்ப்பந்தம் எழ, இதை ஒட்டி நாடாளுமன்றத்தில் குழப்பம் ஏற்பட, குழப்பத்தைத் தவிர்க்கப் பிரதமர் குறுக்கிட்டுப் பேச, அப்படிக் குறுக்கிட்டுக் கருத்துச் சொன்னபோதுதான் அந்த வேண்டுகோளை — (வேண்டுகோளா, கட்டளையா—தெரியவில்லை). நாடாளுமன்றத்தில் எழுப்பியுள்ளார் பிரதமர் மொரார்ஜி

மொழி—எந்த மொழியானாலும், எவ்வளவு உயர்ந்த மொழியானாலும் அது தானே யார்மீதும் ஆதிக்கம் செலுத்துவதில்லை. அம் மொழிக்கு உரியவர்கள் அரசியல் ஆதிக்கம் பெறுகிறபோதுதான் அம்மொழியைப் பிறர்மீது திணிப்பார்கள். மொழி ஆதிக்கத்திற்கு அரசியல் ஆதிக்கமே அடிப்படை. இதைத்தான் உலக வரலாறு கூறுகிறது.

அரசியல் ஆதிக்கம் மொகலாயர்களின் கரத்தில் குவிந்தபோதுதான் வட இந்தியாவில் உருது பரவியது.

உலகின் பல நாடுகள் ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த நேரத்தில்தான் அந்நாடுகளில் ஆங்கிலம் திணிக்கப்பட்டது.

வடமொழி இந்தியாவில் பரவிய வரலாறும் இதுதான்.

ஏறத்தாழ 80 கோடி மக்கள் பேசுகிறார்கள் சீன மொழியை என்பதால் அம்மொழி எந்த நாட்டிலும் திணிக்கப்பட்டதில்லை. காரணம் சீனம் எந்த நாட்டினையும் அரசியல் ஆதிக்கம் செலுத்தியதில்லை. அண்மைக் காலம் வரை சீனத்தின்மீது பிற நாட்டவர்தான் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர்.

ஆனால், ஆங்கிலேயர்கள் இன்று இந்தியாவில் அரசியல் ஆதிக்கம் செலுத்தவில்லை. ஆகவே, அவர்கள் தங்கள் மொழியை இங்கு யார்மீதும் திணிக்கவும் இல்லை. ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாக நீடிக்கட்டும் என்று வேண்டுபவர்களாகவும் ஆங்கிலேயர்கள் இன்று இல்லை. இந்தியர்களே அப்படி வேண்டுகிறார்கள். அதுவும் ஆங்கிலத்தின் நலன் கருதியோ அன்றி ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் கருதியோ அப்படி வேண்டவில்லை. இந்தியாவின் நலன் கருதியும் இந்தியர்களின் நன்மை கருதியுமே வேண்டுகிறார்கள்.

ஆங்கிலம் நூறு நூற்றைம்பது ஆண்டுகளாக நிர்வாக மொழியாகப் பயன்பட்டுள்ளது. ஆங்கிலத்தைப் போல வேறு எந்த இந்திய மொழியும் அப்பணியைத் திறம்படச் செய்யமுடியவில்லை. எனவே, ஆங்கிலமே ஆட்சி மொழியாகத் தொடரட்டும் என்கிறோம்.

பயனோ அன்றிப் பளுவோ—இந்தியர்கள் அனைவர்க்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும் ஆங்கிலம் இருந்தால். இந்தி ஆட்சி மொழி எனில் பயன் இந்திக்காரர்களுக்கும் பளு மற்றவர்களுக்கும் ஆகிறது

எம். ஜி

நாம் இரயிலை, விமானத்தை இன்னபிற அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்துகிறோம் என்றால் அவற்றைக் கண்டுபிடித்தவர்கள் மீதுள்ள மோகத்தால் அல்ல. அவற்றால் விளையும் நன்மை கருதிதான்! தாய்ப்பால் இல்லாத குழந்தைக்குப் புட்டிப்பால் கொடுப்பதைப் போலத்தான் ஆங்கிலத்தை நாம் ஆட்சி மொழியாகப் பயன்படுத்த வேண்டும் என்பது.

ஆங்கிலம் நீடிக்கட்டும் என்று வேண்டினால் ஆதிக்க மொழியாக நீடிக்கட்டும் என்பது பொருள் அல்ல. நமக்கு அடிமைத் தொழில் பார்க்கும் மொழியாக நீடிக்கட்டும் என்று பொருள்!

ஆங்கிலம் அந்நிய மொழி என்ற வாதம் ஆபத்தானது. அதே வாதம் இந்தியாவில் உள்ள தமிழ் போன்ற ஒரு சில மொழிகள் தவிர, மற்ற மொழிகளுக்கும் பொருந்தும். அந்த மொழிகளுக்கும் ஆங்கிலத்திற்கும் 'அந்நியத் தன்மையைப் பொறுத்தவரை வேறுபாடில்லை. கால அளவில் வேண்டுமானால் வேறுபாடு இருக்கலாம்; அவ்வளவே.

இதனை நேரு உணர்ந்திருந்தார். ஒப்புக் கொண்டிருந்தார். அவரே கூறினார்:

"ஆங்கிலத்தை அரசியல் சட்டத்தில் தேசிய மொழிகளின் பட்டியலில் சேர்த்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாது விட்டது பெருந் தவறு" என்று

இந்திய அரசியல் சட்டம் இதில் மட்டும்தான் தவறிழைத்துவிட்டது என்பதில்லை. எத்தனையோ விஷயங்களில் அது தவறிழைத்து விட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தவறு ஒன்றை அரசியல் சட்ட வியல் அறிஞர் 'ஐவர் ஜென்னிங்ஸ் எடுத்துக் காட்டுகிறார்.

அரசியல் சட்டத்தில் அனைவரும் சமம் என்றும் பிறந்த இடத்தாலோ பின் பற்றும் மதத்தாலோ தோன்றிய சாதியாலோ பாரபட்சம் காட்டக்கூடாது என்றும் விதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் மொழி அடிப்படையிலும் பாரபட்சம் காட்டக் கூடாது என்று விதி வகுக்கத் தவறி விட்டது. இந்தியாவைப் பொறுத்தவரை மொழி அடிப்படையிலான பாரபட்சமே மிகக் கொடிய ஒன்றாக இருக்க முடியும். ஆனாலும் சட்டத்தை உருவாக்கியவர்கள் இதனை ஏனோ மறந்து விட்டார்கள் என்று குறிப்பிடுகிறார் நாம் ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்றுகூறுவதற்கு காரணமே இந்தப் பாரபட்சம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்கே இந்தி ஆட்சிமொழி எனில் இந்தி மொழிக்காரர்களுக்குப் பயனும் அம்மொழி பேசா பிறமொழியாளர்களுக்குப் பளுவும் என்ற பாரபட்ச நிலை உருவாகும் என்பதே நாம் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று கோருவதற்குக் காரணமாகும்.

சனதா அரசிலே உள்ள அமைச்சர்கள் இந்தி மொழி ஆர்வத்தைக் காட்டிக் கொள்வதில் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொள்கிறார்கள்.

'பார்...பார்...நான் ஐக்கிய நாடுகள் மன்றத்திலேயே இந்தியில் பேசினேன்' என்கிறார் ஒருவர்.

"இது என்ன பெரிய காரியம்? நான்—மக்கள் 'ஆங்கிலத்திலே பேசுங்கள் என்று வற்புறுத்தியபோதும் அதுபற்றிக் கவலைப்படாமல் இந்தியிலேயே பேசினேனே...அதுவும் இந்திமொழி பேசாத மாநிலத்தில்' என்று மார் தட்டுகிறார் இன்னொருவர்,

அத்வானி இந்தியிலேயே பதில்கூற வைக்கப்படுகிறார்.

குடியரசுத் தலைவர் தம் உரையை இந்தியில் தான் நிகழ்த்திட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப் பட்டதாகச் செய்தி வந்தது பிரதமர் அதை மறுத்தார். ஆனாலும் குடியரசுத் தலைவர் ஆட்சி மொழி பற்றி அண்மைக் காலத்தில் அடிக்கடி கூறிவரும் கருத்து அவரே நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டிருப்பாரோ என்ற சந்தேகத்தை வலுப்படுத்துகிறது.

"மொழிச் சிறுபான்மையினரின் நியாயமான கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் நாடு பிளவு பட்டு விடும்" என்று அவர் பல முறை எச்சரித்துள்ளார்.

நாம், நமது நியாயமான கோரிக்கையை எடுத்து வைத்தால் நம்மை குறுகிய உள்ளம் படைத்தவர்கள். பிரிவினை எண்ணம் படைத்தவர்கள் என்று அதிகாரத்திலே இருப்பவர்கள் வர்ணிக்கிறார்கள் தேச விரோதிகள் என்று நம்மை ஏசுகிறார்கள் நாட்டுப் பற்றுக்கு இவர்கள் தனியுடைமை உரிமை கொண்டாடுகிறார்கள் நாட்டுப் பற்று பொதுவுடைமை இவர்களுக்கே உரிய தனி உடைமை அல்ல; யார் என்ன கூறினாலும் நாம் நமது கடமையைச் செய்வோம்; எவ்வளவு எதிர்ப்பு நேர்ந்தாலும் செய்வோம்; எத்தகைய சோதனை ஏற்பட்டாலும் செய்வோம். இதைத்தான் தலைவர் கலைஞர் எடுத்துரைத்துள்ளார். தலைவர் கூறிய பின்னர் இதுபற்றி இனி வேறு யார் என்ன கூறினால் நமக்கு என்ன?

ஒரு மங்கைக்குக் கிடைத்த மதிப்பு மிக்க முத்து

வெனிசு நகரத்தில் உள்ள டம்ரூன் உணவுச் சாலையில் ஒரு மங்கை உண்பதற்கு வந்தார். அவருக்கு அளிக்கப்பட்ட கடல் வகை உணவான நத்தையை உண்டபோது அதில் ஒரு முத்துவைக் கண்டெடுத்தார்.

ஒன்றரை செண்டி மீட்டர் விட்ட முள்ளதும் இளஞ்சிவப்பு வண்ணமுடைய அந்த முத்துவினுடைய மதிப்பு இருபதாயிரம் ரூபாய் இருக்குமென்று மதிப்பிடப்பட்டதாம்.

உணவுச் சாலையின் உரிமையாளர் இதை அறிந்தபோது, "ஏற்கனவே எங்கள் உணவு விடுதியில் சாப்பிட்ட இரண்டு பேர்களுக்கு இது போன்று முத்து கிடைத்துள்ளது. ஆனாலும் இதுவே பெரிய அளவு உள்ளது" என்று பெருமைப்பட கூறினாராம்.

வந்த மடல்

'நம்நாடு' தழைக்கட்டும்!

நம் நாடு இதழில் 'கலைஞர் கடிதம் கிழமை தோறும் வரும் என எதிர்பார்க்கிறேன் நடுப்பக்கத்தில் இடம் பெறும் கலைஞரின் சிறுகதை எட்டுக்குத் திலகம் போல் இருந்து வருகிறது. கிழமைக்குக் கிழமை நம் நாடு பொலிவுறுகிறது திரு. கந்தப்பன் கட்டுரைகள் கிழமைதோறும் புதுப்புது கருத்தை அள்ளித்தருகிறது. திரு: சா. கணேசன், மா. செங்குட்டுவன், புதுவை நந்திவர்மன் முதலானோர் தீட்டும் கருந்தோவியங்கள் கழகத்தவரை உணர்ச்சிப் பிழம்பாக்குகிறது. உறுதி மிக்க கழகத் தொண்டர்களை உருவாக்க அக் கட்டுரைகள் தொடரட்டும். 'எட்டுத்திக்கிலும்' எனும் தலைப்பில் இடம் பெறும்செய்திகள்படிப்போரை கணநேரத்தில்வெளிநாட்டுக்கு அழைத்துத் திரும்ப தமிழ் மண்ணில் இறக்குகிறது.

'சின்ன சின்ன செய்திகள்' என்பதுநான் தலைப்பு. ஆனால் அரசியல் சதுரங்கத்தில் காய்கள் எப்படி எப்படியெல்லாம் நகர்த்தப்படுகிறது என்ற பெரிய கருத்தை அள்ளித் தருகிறது.

நாற்பது காசில் பன்னிரண்டு பக்கங்கள். புத்தக வடிவு என்று கணக்கிட்டுப் பார்த்தால் நாற்பத்து எட்டு பக்கங்கள். அப்பப்பா - எத்தனை முத்துக்கள்! அரசியல்,பொருளாதாரம்,இலக்கியம், இன்னபிற இனம் மொழி, நாடு, பண்பாடு, உழைப்பு உரிமை அவ்வளவையும் தாங்கிவரும் அழகு மிக்க நல் ஏடு 'நம் நாடு'.

'நம் நாடு' இதழ் வளர விற்பனையில் மேலும் உயர என் போன்ற ஆயிரமாயிரம் கழகத்தவர்களின் ஒத்துழைப்பு என்றும உண்டு இது உறுதி.

நம் நாடு தழைக்கட்டும்!
வாழ்க கலைஞர்!
ஓங்குக அண்ணாவின் புகழ்

அன்பன்,
ஜி. சுப்பிரமணியன்,
மந்தாரகுப்பம் காலனி,
நெய்வேலி-2.

கலைஞரின் கைவண்ணம்!

ஐயா.

'நம் நாடு' 12—3—78 இதழில் கலைஞரின் எழுத்தோவியமாம, "அய்யோ ராஜா" பல ஆண்டுகளுக்கு முன்னால் எழுதிய கதையே ஆயினும், வாசகர்களின் உள்ளத்தில் நீங்காத இடத்தை பெற்றிருக்கும் என்று நான் அறிவேன். கலைஞரின் கைவண்ணத்தில் உருவாகிக் கொண்டு இருக்கும் 'நம் நாடு' 26 இதழ்கள் வெளிவந்துள்ளது இதை அனைத்தையும் படித்துள்ளேன். ஒவ்வொன்றிலும் ஓர் சீர்திருத்தத்தை அமைத்துள்ளார் நம் கலைஞர். அதில் ஒன்று 'அய்யோ ராஜா'.

அன்பன்,
ச. இராஜாராம்,
தொண்டாந்துளசி.

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

மீண்டும் இந்தோ - சீனு பாய் பாய்!

சா. கணேசன்

சமீப காலமாக ஆசிய நாடுகளில் சில, இந்திய நாட்டின்மீது படையெடுத்து வருகின்றன. அந்தப் படையெடுப்புகள் நட்பை நாடுகின்ற அன்புப் படையெடுப்புகளாக அமைந்துள்ளன. அண்மையில் எண்ணெய்வள ஆதிக்கம் கொண்ட ஈரான் நாட்டின் அதிபர் இந்திய நாட்டிற்கு வருகைதந்து இனிய நட்பினை மேலும் இறுக்கம் ஆக்கிக் கொண்டார். இரு நாடுகளுக்கிடையே வர்த்தகம் பெருகிட மேலும் வழிவகை செய்யப்பட்டது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்வரை வியத்நாம் நாடு—வட வியத்நாம், தென் வியத்நாம் என்று தனித்தனி நாடுகளாக விளங்கி வந்தன. தங்களிடையே சுமார் கால் நூற்றாண்டுக்காலமாகபோரிட்டுக் கொண்டிருந்தன. வட வியத்நாம் பெற்ற வெற்றியின் விளைவாக ஒரே வியத்நாம் நாடாக உருவெடுத்தது

உலகத் தலைவர்களில் ஒருவர் ஹோசிமின். அவரால் உருவாக்கப்பட்டதே புத்தம் புதிய வியத்நாம். பொதுவுடைமை பூத்துக் குலுங்கிடும் வடவியத்நாம், தெற்கையும் இணைத்திட தொடங்கிய போரில் வெற்றியைக் குவித்தது. ஹோசிமின் வாரிசாக விளங்கிடும் இன்றைய தலைமை அமைச்சர் பாம் - வான் - டாங் நமது நாட்டிற்கு நல்வருகை தந்தார். இரு நாடுகளுக்கிடையே இருந்துவரும் இனிய நட்பினை உறுதி செய்தார். உள்ள வர்த்தகத் தொடர்பை உவகையோடு வளர்த்திட பரந்த உள்ளத்தோடு நல்வழி கண்டார்.

ஜனநாயகக் காவலர் ஜவகர்லால் நேரு பாண்டுங் மாட்டில் பரப்பிய கொள்கையே பஞ்சசீலமாகும். அவர் ஆசிய நாடுகளின் ஐக்கியத்தை உருவாக்கினார். செஞ்சீனத்தின் சிந்தையைக் கவர்ந்த "இந்தோ சீனு பாய் பாய்" என்ற இனிய கீதத்தை இசைக்கத் தொடங்கினார். புதிய சீனத்தின் அதிசயத் தலைவர், மார்க்சியத்துக்கு மறுமலர்ச்சி உண்டாக்கிய மகத்தான மனிதர், மக்கள் தலைவர் மா-சே-துங் இந்திய நாட்டின் இணைபிரியா நண்பராக, பண்டித நேருவின் அன்புச் சகோதரராக அன்று முதல் விளங்கத் தொடங்கினர்.

சகோதரராக விளங்கி வந்த சீனத்தின் தலைவர் மா-சே-துங் இந்திய மண்ணை அபகரித்திட இறங்கினர். ஆக்கிரமிப்புப் போரில் ஆயிரக்கணக்கான சதுர மைல் நிலப்பரப்பை அநியாயமாக கைப்பற்றிக் கொண்டார்.

கைபபற்றிய நிலத்தை திருப்பி அளிக்கவில்லை. இழந்துவிட்ட நிலப்பரப்பை இந்தியா மீட்க முயலவில்லை. நட்பு நாளடைவில் அற்று விட்டது. பகைமை அங்கே பயிராகி விட்டது.

மாபெரும் தலைவர் மாசே துங் அவர்களின் மறைவிக்குப் பின் சீனத்தின் வெளிநாட்டுக் கொள்கை வேறுக விளங்கி வருகிறது. சீனத்தின் அவாவினை நிறைவேற்ற ஹூவா தலைமையேற்றுள்ளார் பகைமையினை அழித்து நட்பினை நாடும் போக்கு பாரெங்கும் பரவலாக வரவேற்கப்படுகிறது.

சீன வரலாற்றில் ஒரு திருப்பம். 'இந்தோ சீனு! 'பாய் 'பாய்' என்ற பழைய முழக்கம் புதிய உத்வேகத்தோடு, உணர்ச்சியோடு ஒலிக்க வேண்டும் என்ற எண்ணம் சீன அரசிடையே எழும்பியுள்ளது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு நட்பினைப் புதுப்பிக்க சீனத் தூதுக்குழு ஒன்று நமது நாட்டிற்கு வந்துள்ளது; தூதுக்குழுவின் தலைவர் வாங் பிங்-நன் கடந்த ஒரு வார காலமாகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினர்.

"இந்திய சீன மக்கள் நண்பர்களாக இருந்தாக வேண்டும். சில சமயங்களில் சகோதரர்களிடையேகூடச்சண்டை வருவதுண்டு. ஆனாலும் சகோதரர்கள் சகோதரர்களே ஆவார்கள். சண்டை தற்காலிகமானதே. நமது நட்புறவு நிரந்தரமானது."

இந்திய அரசு அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினர். ஏற்கனவே சீனவுக்கு வரவேண்டும் என்று வாஜ்பாய்க்கு சீன வேண்டுகோள் விடுத்துள்ளது.

நட்பு நல்ல நட்பாக நாளும் தழைத்திட- கைப்பற்றிய இந்தியப் பகுதியைத்திருப்பித் தந்திட பேச்சு வார்த்தைக்கு இணங்கும் அறிகுறி தெரிகிறது. பேச்சு வார்த்தை வெற்றியானல் காயும் கனிந்தால் இந்தோ-சீனு 'பாய்' 'பாய்' என்ற முழக்கத்தை மீண்டும் புதுப்பிக்கப்பொருள் இருக்க முடியும். நாடு எதிர் பார்க்கின்றது நல்ல முடிவினை!

எட்டுத்திக்கிலும்..!

இலங்கையிலும் 'இருண்ட காலமா ?'

இந்தியாவின் 'இருண்ட காலத்தின்' போது காவல் துறையினர் கட்டவிழ்த்து விடப்பட்டதுபோல், இன்று இலங்கையிலும் காவல் துறையினர் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளார்கள்.

'தலைமறைவாகிவிட்ட' சில இளைஞர்களைத் தேடுவதாகச் சொல்லிக் கொண்டு, காவல் துறையினர் ஒரு தவறுமிழைக்காத அப்பாவிகளைத் துன்புறுத்தி வருகின்றனர்.

கடந்த மாதம் வல்வெட்டித்துறை என்ற ஊருக்கு அருகே இருக்கும் ஆலடிஎன்னுமிடத்தில் கடை வைத்திருந்த ராசா யோகராசா என்ற இளைஞரைக் காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்று அடித்து உதைத்திருக்கிறார்கள்

அவரை 'ஜீப்'பில் ஏற்றும் போதே கனத்த பூட்ஸ் கால்களால் உதைத்தார்களாம். 'தலை மறைவானவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று காவலர்கள் அவரைக் கேட்டு தெரியாது என்று அவர் பதில் சொன்னதால் இரவு முழுக்கக் காவல் நிலையத்தில் அடைத்து வைத்து மிருகத்தனமாகத் தாக்கியுள்ளார்கள்.

'வெள்ளையனே வெளியேறு!'

தென் ரொடிசியாவில் இருக்கும் சிறுபான்மையினரான வெள்ளையர், பெரும்பான்மையினரான கறுப்பர் மீது ஆதிக்கம் செலுத்தி அவர்களைத் துன்புறுத்தி வருவது தெரிந்ததே.

ஜாகீர்

கறுப்பர் நாடான ஜாம்பியாவுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய கூலிப்பட்டாளத்தை தென் ரொடிசிய சிறுபான்மை வெள்ளை அரசு ஏவிவிட்டுள்ளது

இதைக் கடுமையாகக் கண்டித்து ஆறு கூட்டுச்சேரா நாடுகள் ஐ. நா. வில் ஒரு தீர்மானம் கொண்டு வந்துள்ளன. 'இயன் சுமித்' தலைமையிலான வெள்ளை அரசின் ஆதிக்கத்திற்கு விரைவிலேயே ரொடிசியாவில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமெனவும் அத்தீர்மானம் கூறுகிறது.

கூட்டு சேரா நாடுகளின் சார்பாக இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தது — இந்தியா

அமைச்சரைக் கொன்றவர்களுக்குத் தூக்கு!

1977-ஆம் ஆண்டு எகிப்தின் முன்னாள் அமைச்சர் முகம்மது ஹூசைன் ஜஹாபி படுகொலை செய்யப்பட்டார். கத்தியால் உடம்பில் பல இடங்களில் குத்திக் குத்தி சித்திரவதை செய்யப்பட்ட பிறகு கொலைகாரர்கள் அவரை இறுதியாகச் சுட்டுக் கொன்றார்கள்.

1966-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தீவிர முசுலிம் இயக்கத்தின் தலைவர்களில் ஐந்து பேர் அக்கொலையைச் செய்தார்கள்; எகிப்தின் இராணுவ நீதி மன்றம் அவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதத்துள்ளது

அவ்வியக்கம், மத வெறி' பிடித்தலையும் ஒரு வெறித்தனமான இயக்கமாகும்'



திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம் சென்னை 600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104-B, அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009